மாலை முரசு

பக்கங்கள் 23

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 30 ஞாயிற்றுக்கிழமை 19.11.2023 அதிர்வு 111

## மாராவில் கடலில் காணாமல் போயிருந்த ஜப்பானிய பிரஜை உட்பட நால்வரும் மீட்பு!



02

# ராஜபக்ஷக்களை தூக்கிலிட வேண்டும்!

## மஹிந்தவுக்குச் சஜித் அணி பதிலடி

இலங்கையின் பொருளாதாரத்தைச் சீரழித்த ராஜபக்ஷக்களையும் அவர்களின் சகாக்களையும் தூக்கிலிட வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கூட்டாக வலியுறுத்தியுள்ளனர்.

“நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தி நாட்டைச் சீரழித்தவர்கள் ராஜபக்ஷக்கள் என்று உயர் நீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு வழங்கியுள்ளது. இதை நாம் வரவேற்கின்றோம். ஆனால், இந்தத் தீர்ப்புக்கு மதிப்பளிக்காத மஹிந்த ராஜபக்ஷ, நல்லாட்சி அரசில் இருந்த தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தியினரே நாட்டைச் சீரழித்தவர்கள் என்று வெட்கம் இல்லாமல் கூறியுள்ளார். 04



## மின்சாரம் தாக்கி இளைஞர் மரணம்

(ராமு தனராஜா)

காட்டுக்குள் மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் நபர் ஒருவரின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது. 04



## ‘ஜெயசிக்குறு சண்டியன்’ ஏரம்பு ஐயா காலமானார்



விடுதலைப் போராட்ட காலத்தில் வெளியாகியிருந்த பெருமளவான திரைப்படங்கள் மற்றும் வீதி நாடகங்களில் முக்கிய பங்காற்றி நடித்த பிரபல கலைஞர் மாணிக்கம் ஏரம்பு நேற்று காலமானார்.

யாழ்ப்பாணம், அராலியைச் சேர்ந்த ஏரம்பு யாழ்ப்பாணம் இடப்பெயர்வுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே விடுதலைப் போராட்டக் கலைப் படைப்புக்களில் பங்கேற்றிருந்தார்.

காத்தவராயன் சிந்துநடைக்கூத்து, இராமர் கதை, சத்தியவான் சாவித்திரி, பண்டாரவன்னியன் போன்ற யாழ். மரபு வழிக் கூத்துக்களில் 04

## வாகன விபத்தில் மூவர் படுகாயம்!





(கே.வசந்தரூபன்)

வவுனியா, ஓமந்தையில் பாரவூர்தியுடன் இ.போ.ச. பஸ் மோதி 04

## யாழில் வயோதிபர் அடித்துக் கொலை!

### வாய் பேச இயலாத சந்தேகநபர் ஒருவர் கைது

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், உரும்பிராய் தெற்குப் பகுதியில் வயோதிபர் ஒருவர் நேற்று இரவு அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

உணவகம் ஒன்றில் பணியாற்றும் உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிறேமராசன் என்கின்ற 66 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.



தாக்குதலுக்கு இலக்காகிய வயோதிபர் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை சேர்க்கப்பட்ட நிலையில் 04

### கறுப்புக் கொடி கட்டப்பட்டு

## கிழக்கு ஆளுநருக்கு எதிராகப் போராட்டம்



- அபு அலா -

அட்டாளைச்சேனை பிரதேச வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்ட 04

# மாராவில் கடலில் காணாமல் போயிருந்த ஜப்பானிய பிரஜை உட்பட நால்வரும் மீட்பு!



(ரஸீன் ரஸ்மின்)

மாராவில், முஹுதுகட்டுவ பிரதேசத்தில் கடலுக்குச் சென்று காணாமல் போயிருந்த ஜப்பானிய பிரஜை உட்பட நான்கு பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளனர்.

மாராவில், முஹுதுகட்டுவ பிரதேசத்தில் மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற படகு கவிழ்ந்ததில் ஜப்பானிய பிரஜை உட்பட நால்வர் நேற்று (18) மாலை காணாமல் போயிருந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன படகின் உரிமையாளரான மாராவில், வடக்கு முதுகட்டுவைச் சேர்ந்த ஸ்ரீயானி ஜீவனி பெர்னாண்டோ மாரவில் பொலிஸாருக்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

மீன் பிடிக்கும்போது திடீரென பெய்த மழையுடன் படகு கடலில் கவிழ்ந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

படகைச் செலுத்திச் சென்றவர்கள் இது குறித்து கரையில் இருந்த மற்றொரு மீனவருக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்துள்ளனர்.

அதன்படி படகு கவிழ்ந்ததாக கூறப்படும் பகுதிக்கு சென்ற மற்றொரு குழுவினர் படகைச் செலுத்திச் சென்றவர்களை மீட்டு கரைக்கு கொண்டு வந்தனர்.

எனினும் படகில் இருந்த ஏனைய நான்கு பேரும் காணாமல் போயுள்ளனர் என்று முறைப்பாட்டாளர், பொலிஸாரிடம் தெரிவித்திருந்தனர்.

கடற்படையினரின் உதவியுடன் காணாமல் போனவர்களை தேடும் நடவடிக்கையை முன்னெடுக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், படகில் இருந்த நான்கு பேரும் கண்டுபிடிக்கப்பட்டனர் என்றும் அவர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாராவில் மற்றும் தொடுவா பிரதேசங்களை சேர்ந்தவர்களும் ஜப்பானிய பிரஜை ஒருவருமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளனர்.

# போதைப் பொருள் வியாபாரி என்ற சந்தேகத்தில் ஒருவர் கைதானார்!

## தாய்லாந்தில் இருந்து திரும்பியபோது கட்டுநாயக்காவில் சம்பவம்




(ரஸீன் ரஸ்மின்)

தனது குடும்பத்துடன் தாய்லாந்துக்குச் சுற்றுலா சென்று இலங்கை திரும்பிய ஒருவர் போதைப் பொருள் வியாபாரி என்ற சந்தேகத்தில் இன்று நண்பகல் கட்டுநாயக்க பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு-08, பொரளை பிரதேசத்தில் வசிக்கும் 44 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், திருகோணமலை பிரதேசத்தில் ஐஸ் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட பொலிஸ் கான்ஸ்டபிளுக்குப் போதைப்பொருள் வழங்கியவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட நபர், அவர் தனது குடும்ப உறுப்பினர்களுடன் தாய்லாந்துக்கு சுற்றுலா பயணத்தை முடித்துக் கொண்டு பேங்கொக்கில் இருந்து ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானமான யூ.எல். 405 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பிரிவின் தலைமையகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# போலி அனுமதிப் பத்திரங்களை பயன்படுத்திய இருவர் கைதாகினர்!



மணல் ஏற்றும் போலி அனுமதிப்பத்திரங்களைப்பயன்படுத்திய குற்றச்சாட்டில் கிளிநொச்சியைச் சேர்ந்த இருவர் யாழ். மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு அனுமதிப் பத்திரங்கள் பெறவேண்டியது கட்டாயம். இந்த அனுமதிப் பத்திரங்கள் கனியவளத் திணைக்களத்தால் வழங்கப்படும்.

அந்த அனுமதிப் பத்திரங்களையே போலியான முறையில் தயாரித்து இவர்கள் பயன்படுத்தியுள்ளனர். ஒரு மணல் அனுமதிப் பத்திரம் தொடர்பாக மேற்கொண்ட விசாரணைகளில் அந்தப் பத்திரம் போலியானது என்று கண்டறியப்பட்டிருந்தது.

அதையடுத்து யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான பொலிஸ் குழு இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்திருந்தது.

விசாரணையின் அடிப்படையில் கிளிநொச்சி மற்றும் விசுவமடுவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதை ஒருவருக்கு வழங்கியமை, போலியான அனுமதிப் பத்திரம் என்று தெரிந்தும் அதைப் பயன்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போலியான அனுமதிப் பத்திரம் ஒன்றுக்காகச் சுமார் 15 ஆயிரம் ரூபா வரையில் அறவிடப்பட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# ரெலோவின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளராக சபா குகதாஸ்!

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ( ரெலோ) தனது 11 மாநாட்டை நடத்துவதற்கு முன் ஆயத்தமாக மாவட்ட நிர்வாகங்களை புதிப்பித்து வருகின்றது. அதற்கு அமைவாக யாழ். மாவட்ட நிர்வாகத் தெரிவுக் கூட்டம் நேற்று (18) யாழ். நகரப் பகுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட உறுப்பினர்கள், ரெலோ தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனா கருணாகரம், ஊடகபேச்சாளர் கு.சுரேந்திரன் உள்ளிட்ட தலைமைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நிர்வாகத் தெரிவில் யாழ். மாவட்ட அமைப்பாளராக வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவு செய்யப்பட்டார். அத்துடன் துணை மாவட்ட அமைப்பாளராக யாழ். மாநகர முன்னாள் துணை மேயர் து.ஈசன் தெரிவு செய்யப்பட்டார். 37 பொதுக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.



# திருவாசகக் கட்டுரைப் போட்டிக்கு ஆக்கங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத் துறையும், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் சைவ மாணவர் சபையும் இணைந்து இந்த ஆண்டுக்கான திருவாசகக் கட்டுரைப் போட்டியை நடத்தவுள்ளன.

டிசெம்பர் 25 ஆம் திகதி இடம்பெறவுள்ள மார்கழி பெருவிழாவை முன்னிட்டு மாணவர்களிடையே சைவ சமய அறிவாற்றலை மேம்படுத்தும் நோக்குடன் சிவத்தமிழ் வித்தகர் சிவ மாகாலிங்கத்தின் நினைவாக நடத்தப்படவுள்ளது.

தரம் 9 தொடக்கம் 13 வரையான மாணவர்களுக்கு “தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” எனும் தலைப்பில் 700 சொற்களில் கட்டுரை அமைய வேண்டும்.



பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்களுக்கு “மன்னு மாமலை மகேந்திரமதனில் சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்” எனும் தலைப்பில் 1000 சொற்களில் கட்டுரை அமைய வேண்டும்.

பாடசாலை மாணவர்கள் அதிபர் ஊடாக தமது சுய ஆக்கம் என்பதை உறுதிப்படுத்துவதுடன், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வித்துறை மாணவர்கள் தமது கல்வி நிறுவன அடையாள அட்டை பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும்.

கட்டுரைகள் 05.12.2023 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம், தென்னாடு வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

வெற்றியாளர்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்படும். போட்டி தொடர்பிலான மேலதிக விவரங்களை 0707701111 என்றும் இலக்கம் ஊடாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மின்சாரம் தாக்கி....

இந்தச் சம்பவம் ஹாலி – எல, ரொக்கத்தன்ன பகுதியில் இடம் பெற்றுள்ளது என்று ஹாலி – எல பொலிஸார் தெரிவித்தனர்.

இறந்த நபர் 22 வயதுடைய ரொக்கத்தன்ன நடுப் பிரிவு தோட்டத்தைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்த நபர் நேற்றிரவு தனது வீட்டுக்குக் கீழ் பகுதியில் உள்ள காட்டுப் பிரதேசத்தில் பன்றிகளை வேட்டையாடுவதற்காக மின்சார வேலியை அமைப்பதற்காகச் சென்ற வேளையில் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்துள்ளார்.

அந்த நபர் காட்டுப் பகுதிக்குச் சென்று மிக நீண்ட நேரமாக வீடு திரும்பாதமையால் காட்டுப் பகுதியில் உறவினர்கள் தேடுதலை மேற்கொண்டனர். இதன் போது அந்த நபர் உயிரிழந்த நிலையில் இன்று காலை காணப்பட்டதை உறவினர்கள் அவதானித்தனர். அது தொடர்பில் உடனடியாக ஹாலி – எல பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்குப் பொலிஸார் விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தையும் மீட்டு வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

### ஜெயசிக்குறு...

சிறந்து விளங்கிய அவர், போர்க்காலப் படைப்புகளில் தன்னை இணைத்துப் பயணித்தார்.

யாழ்ப்பாணம் இடப்பெயர்வின்போது வன்னிக்கு இடம்பெயர்ந்த அவர், இறுதிப் போர் முடிவுறும் வரையில் அங்கு வாழ்ந்திருந்தார்.

அதன்போது தெரு வெளி அரங்குகளில் நடைபெற்ற நாடகங்களில் பிரதான பாத்திரம் ஏற்று நடித்திருந்தார்.

ஜெயசிக்குறு நடவடிக்கையை சித்தரிக்கும் வகையில் இடம்பெற்ற வீதி நாடகம் ஒன்றில் ஜெயசிக்குறு சண்டியன் பாத்திரம் ஏற்று நடித்து அனைவரதும் பாராட்டைப் பெற்றிருந்த அவர் பின்னாட்களில் 'ஜெயசிக்குறு சண்டின்' என்று அழைக்கப்பட்டார்.

விடுதலைப் போராட்டகாலத்தில் வெளியாகிய பெருமளவான முழுநீளத் திரைப்படங்கள் மற்றும் ஏராளமான குறும்படங்களிலும் அவர் பங்கேற்று நடித்திருந்தார்.

குறிப்பாக காற்றுவெழி, உயிர்ப்பூ, கடலோரக்காற்று, காற்றுவெளி, சின்ன விழிகள், குருதிச்சன்னங்கள், அம்மா நலமா? உட்பட்ட ஏராளம் போர்க்காலப் படைப்புக்களில் அவர் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடித்திருந்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரால் மதிப்பளிக்கப்பட்ட கலைஞர்களில் ஏரம்புவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏரம்பு கலைஞராக மட்டுமல்லாது சிறந்த சாரதியாகவும் விடுதலைப்புலிகள் அமைப்பின் நிதர்சனம் பிரிவில் எட்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிருந்தார்.

போருக்குப் பின்னரும் அண்மையில் வெளிவந்த பல படங்களிலும் அவர் நடித்திருந்தார். அவருடைய இழப்பு ஈழத் தமிழ் மக்களின் திரைத்துறை மற்றும் அரங்கத்துறைக்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும் என்கின்றனர் சக கலைஞர்கள்.

### கிழக்கு ஆளுநருக்கு...

மூன்று மாடிக் கட்டடம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையைக் கண்டித்து இன்று அப்பகுதி மக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அந்த வைத்தியசாலைக்கு உபகரணங்கள் வழங்கப்படாமல் இருக்கின்ற நிலையில் அந்த வைத்தியசாலையின் கட்டடம் இன்று திறக்கப்படவுள்ளதை எதிர்த்தும், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பிழையான முடிவையும் எதிர்த்துமே அட்டாளைச்சேனை பிரதேத்தில் கறுப்புக் கொடி கட்டப்பட்டு பதாகைகள் கட்டியும் எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

### வாகன விபத்தில்...

விபத்துக்குள்ளாகியதில் மூவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இன்று காலை இடம்பெற்ற இந்த விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற பாரவூர்தி ஓமந்தைப் பகுதியில் பயணித்த போது வீதியில் படுத்திருந்த மாடுகளுடன் மோதி விபத்து ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் முற்பட்ட போது அதே வழியில் வந்த இ.போ.ச. பஸ் கட்டுப்பாட்டை இழந்து பாரவூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதையடுத்து பாரவூர்தி வீதியை விட்டு விலகி தடம்புரண்டுள்ளது. இந்த விபத்தில் பாரவூர்தியைச் செலுத்தி வந்த சாரதியும், அதில் பயணித்த ஒருவரும் படுகாயமடைந்துள்ளனர். அதேவேளை, பயணித்த பயணி ஒருவரும் படுகாயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த மூவரும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

### ராஜபக்ஷக்களை...

நாட்டின் பொருளாதாரச் சீரழிவுக்குக் காரணமானவர்கள் என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கமைய ராஜபக்ஷக்களினதும் அவரின் சகாக்களினதும் குடியுரிமையைப் பறிக்க வேண்டும். அவர்களிடமிருந்து நட்டஈடு பெற வேண்டும். அவர்கள் திருடிய பணம் தற்போதும் அவர்களிடமே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் அவர்களைச் சும்மாவிட முடியாது. அவர்களைக் கூண்டோடு தூக்கிலிட வேண்டும்" – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, லக்ஷ்மன் கிரியெல்ல, ராஜித சேனாரத்ன மற்றும் சரத் பொன்சேகா ஆகிய எம்.பிக்கள் கூட்டாகத் தெரிவித்தனர்.

### யாழில் வயோதிபர்...

உயிரிழந்துள்ளார்.

அவர் பணியாற்றும் உணவகத்தில் ஏற்பட்ட முரண்பாடே கொலைக்கான காரணம் எனத் தெரியவரும் நிலையில் அதே பகுதியைச் சேர்ந்த வாய் பேச இயலாத 44 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைநடந்த இடத்தையாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஆனந்தராஜா இன்று பார்வையிட்டார்.

தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்தில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# வினைத்திறன் காண் தடை தாண்டல் பயிற்சி முடித்தோருக்குச் சான்றிதழ்!

(பழுவூரான்)

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம்-1 வகுப்புடைய அலுவலகர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டலில் இருந்து விடுவிப்பதற்கான பாடநெறிப் பயிற்சி வகுப்பை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்தின் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (17) இந்த நிகழ்வு நடைபெற்றது.

மண்முனை வடக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த 07 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக 10 நாள்கள் இடம் பெற்ற இப்பயிற்சியின் இறுதி நாளன்று பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் இப்பயிற்சிப் பாசறையில், கற்றுக் கொண்ட விடயங்கள் மற்றும் அனுபவங்களைத் திணைக்களத்தில் பயன்படுத்தி சிறந்த சேவையை வழங்க வேண்டும் எனப் பங்குபற்றுனர்களிடம் கேட்டுக் கொண்டார்.

இந் நிகழ்வில் உதவி மாவட்டச் செயலாளர் ஆ. நவேஸ்வரன், மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளர் திருமதி ஆர்.காயத்திரி, மாவட்ட செயலக கணக்காளர் வினோத், மாவட்ட செயலக நிருவாக உத்தியோகத்தர் கே. மதிவண்ணன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சிப் பாசறையில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் 1 வகுப்புடைய 54 உத்தியோகத்தர்கள் பங்கு பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கல்முனை ரஹ்மத் நிதியத்தால் பொதுக் கிணறு அமைப்பு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாலமுனை உதுமாபுரம் ரமழான் கிராமத்தில் வசித்து வருகின்ற 18 குடும்பங்கள் அன்றாடம் தமது குடி தண்ணீர் தேவைக்காக தூரப் பிரதேசங்களுக்குச் சென்று தண்ணீர் எடுத்து வரும் நிலைமை காணப்பட்டது.

இந்தக் கிரமாம மக்களின் குடி தண்ணீர் பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முகமாக பொதுக் கிணறுகள் அமைத்துத் தருமாறு ரஹ்மத் நிதியத்திடம், பாலமுனை ஜனாஸா நலன்புரிச் சங்க பணிப்பாளரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாலமுனைக்கான மத்திய குழு ஆலோசகருமான ஐ.பீ.எம். ஜிப்ரி இந்தக் கிராம மக்கள் சார்பாகக் கோரிக்கை விடுத்திருந்தார்.



விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வரும், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய ஒருங்கிணைப்புச் செயலாளரும், கல்முனை ரஹ்மத் நிதியத்தின் ஸ்தாபகருமான ரஹ்மத் மன்சூர் மிகவும் குறுகிய நாள்களுக்குள் பொதுக் கிணறு ஒன்றை அமைத்து மக்களின் பாவனைக்காகக் கையளித்துள்ளார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இந்தப் பருப்பு அவியாது

வெறுங்கையால் முழம் போட்டு, வாய்ப் பந்தல் அமைத்து, விடயங்களை ஒப்பேற்றி விடலாம் என்று கனவு காண்கின்றது ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிப் பீடம்.

புலம்பெயர் இலங்கையர்களின் கவனத்தை ஈர்த்து, அவர்களை நாட்டுக்குள் முதலிடச் செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி விடலாம் என்ற திட்டத்துடன் ரணில் அரசு எடுத்திருக்கும் முயற்சிகளை - காய் நகர்த்தல்களை - நோக்கும் போது, இந்த வாய்ப்பந்தல் பேச்சு மூலம் காரியங்களை சாதிக்க எண்ணும் அந்த ஆட்சிப் பீடத்தின் திறமை குறித்து நகைப்புணர்வே பீறிடுகின்றது.

இதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் வெளி நாட்டு இலங்கை விவகாரங்களுக்கான அலுவலகம் (OOSLA) என அழைக்கப்படும் ஒரு பிரிவையும் ரணிலின் அரசு இயக்கத் தொடங்கியிருக்கின்றது.

இந்தத் திட்டத்தில் வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் 62 தூதரகங்கள் இணைக்கப்பட்டு, செயற்படப் பணிக்கப்படும் என்று இந்த அலுவல கத்தின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் இலங்கையின் ராஜதந்திரிகளில் ஒருவரான வி.கிருஷ்ண மூர்த்தி தெரிவித்திருக்கின்றார்.

"ஆரம்பத்தில், கனடா, அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஆஸ்திரேலியா மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களை இலக்காகக் கொண்டும், அதன் பின்னர் ஆசியா மற்றும் பிற நாடுகளுக்கும் செல்வோம்" என்று கிருஷ்ணமூர்த்தி கூறுகின்றார்.

"புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் வெளிநாட்டு இலங்கை விவகாரங்களுக்கான அலுவலகம் இதற்காக உலகத் தமிழ் பேரவை, ஹொங்கொங் பௌத்த கலாசார சங்கம் மற்றும் ஜேர்மனியில் உள்ள தாய்ச் சங்கம் ஆகியவற்றையும் அணுகும்" என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

இனப் பிளவுகளுக்கு அப்பாற்பட்ட புலம் பெயர்ந்த இலங்கையர்களை இலக்காகக் கொண்டு அவர்களை நாட்டில் முதலீடு செய்ய வற்புறுத்துவது இந்தப் பிரிவின் முக்கிய நோக்கமாகும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

எங்கள் பணியின் மையமானது இலங்கை புலம் பெயர்ந்தோருடன் உரையாடல் மூலம் நம்பிக்கையை கட்டியெழுப்புவதாகும் என்றும் அவர் குறிப்பிடு கின்றார்.

இதுதான் வெறுங்கையால் முழம் போடும் முயற்சி. பச்சைத் தண்ணீரில் பலகாரம் சுடும் எத்தனம். இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்தவர்களில் வலிமையான மக்கள் கூட்டமாக இருப்பவர்கள் ஈழத் தமிழர் புலம்பெயர் சமூகத்தினர்தான்.

இலங்கை நாட்டின் பொருளாதார நிலைமை யையே மாற்றி அமைக்கக்கூடிய வலிமையோடும் வளத்தோடும் புலம்பெயர் நாடுகளில் ஸ்திரமாக நிலை கொண்டிருப்பது அந்த ஈழத் தமிழ்ச் சமூகம் தான்.

இலங்கை நாட்டின் பௌத்த - சிங்கள பேரின வாதத்தின் கொடூர இனவெறி ஆட்சி முறைக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் இந்த மண்ணை விட்டு வேரோடும், வேரடி மண்ணோடும் தூக்கி வீசப்பட்ட தமிழ் உறவுகள் அவர்கள்.

இந்த மண்ணில் பேரினவாதம் பேயுருக் கொண்டு புரியம் அடாவடித்தனங்களையும், அட்டூழியங்களை யும், கொடூரங்களையும் அந்தப் புலம்பெயர் சமூகம் நன்கு அறியும். அந்த விடயங்கள் அந்த சமூகத் துக்கு அத்துபடி.

இலங்கையின் இனவெறி ஆட்சிப் பீடம் தனது போக்கை முழுமையாக மாற்றாமல் - நடந்த கொடூ ரங்களுக்கு பொறுப்புக் கூறும் கடப்பாட்டை நிறைவு செய்யாமல் - இலங்கை தீவில் நீதி, நியாயம், சமா தானம், அமைதி, இணக்கத் தீர்வு போன்றவற்றை உண்மையான முறையில் நடைமுறைப்படுத்த முன் வராமல் - இருக்கும் வரை, இந்தத் தமிழ்ப் புலம் பெயர் சமூகம் இந்த மண்ணில் முதலிட்டுத் தனது பொருளாதார வளத்தையும் இழக்க முன்வராது என்பது உறுதி.

சிங்களத்தின் கொடூர, குரூர, அடாவடி முகம் இன்று உலகப் பிரசித்தி பெற்ற விடயம்.

அத்தகைய தரப்பின் பொருளாதார அபிவிருத்தி என்ற நாடகம் - பருப்பு - ஈழத் தமிழ்ப் புலம்பெயர் சமூகத்திடம் அவியாது.

# வீதியை விட்டு விலகிய பஸ் விபத்து; முழங்காவில் பகுதியில் சம்பவம்!

(மன்னார் நிருபர்)



யாழ்ப்பாணம் – மன்னார் வீதியில் பயணித்த தனியார் பஸ் வீதியில் இருந்து விலத்தி விபத்துக்குள்ளானது. நூற்றுக் கணக்கான பயணிகள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் – முழங்காவில் பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று (18) மதியம் 3 மணியளவில் புறப்பட்ட தனியார் பஸ் பயணிகளை ஏற்றிக் கொண்டு முழங்காவில் முக்கொம்பன் பகுதியில் பயணித்து கொண்டிருந்த போது சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் சம்பவத்தில் பாதிக் கப்பட்ட பயணிகள் பஸ்ஸில் இருந்து இறக்கப்பட்டு வேறு பஸ்ஸில் அனுப்பி வைக்கப்பட்டனர். பஸ் பொலிஸார் மேல திக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட் டது.

தொடர்ச்சியாக மன்னார் – யாழ்ப் பாணம், மன்னார் – வவுனியா வீதிகளில் பஸ் சாரதிகள் மக்களின் உயிர்களை மதிக்காது போட்டி போட்டு வாகனங் களைச் செலுத்தும் சம்பவங்கள் அதி கரித்துள்ளன என்றும் இவ்வாறான விபத்துகள் ஏற்பட அதுவே காரணம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023




"மரங்களின் பிரதாதொழிற்பாடுகள் புரிந்துகொள்ளப்பட்டு அவை உயிர்வாழ் அங்கிகளாக ம்மால் உணரப்பட்டால், அவை எமக்கு ஆதாயமும் அகமகிழ்வும் தரக்கூடிய என்றும் முடிவில்லாத வளமாக விளங்கும்."

-நி.தி.மிரோவ் (அமெரிக்க எழுத்தாளர்)

# அறிவாராய்ச்சியியல்!
# ( Epistemology )

அறிவாராய்ச்சியியல் என்றால் என்ன? அறிவாராய்ச்சியியல் என்ற பதமானது ஆங்கிலத்தில் Epistemology என அழைக்கப்படும். இதனுடைய பொருளானது Theory of knowledge என கருதப்படுகிறது. இது ஓர் மெய்யியலின் ஓர் பகுதியாகவும் காணப்படுகிறது. ஏனெனில் மெய்யியல் என்பது அறிவைத் தேடுகின்ற உண்மையை கண்டு



பிடிக்கின்ற ஓர் பரப்பாக இருப்பதால் அறிவாராச்சியியல் உள்ள விடயங்களை மெய்யியல் தேடுகின்றது. அதாவது அறிவின் இயல்புகள் யாவை?அறிவின் மூலாதாரம் என்ன? அறிவு பூரணமானதா? அறிவை நாம் எவ்வாறு பெறுகின்றோம்?அறிவுக்கும் நம்பிக்கைக்கும் இடையில் உள்ள தொடர்பு என்ன?அறிவு எதனை சார்ந்துள்ளது? போன்ற பல்வேறு இயல்புகளை மெய்யியல் ஆய்வு செய்கின்றது.

நாம் எல்லோரும் பெறும் அறிவு நமக்குள்ளேயே சரியானது என்று நம்புகின்றோம். ஏற்கின்றோம். இவ்வாறு நமக்குள் நம்பப்படும் அறிவு எவ்வளவு தூரம் பொதுவான உலக பொதுமையான அறிவாக காணப்படும் என்பதை மெய்யியல் அறிவு செய்கிறது. எல்லா துறைகளுமே அறிவியலை பெறுவதை நோக்காக கொண்டுள்ளது. இந்த அறிவுத் துறைகள் தம்முடைய அறிவு சரியானது என ஏற்றுகொள்வதற்கும் தர்க்க ரீதியாக நிறுவுவதற்கும் வேண்டிய சில முறைகளை உருவாக்குகின்றன.

இதன் அடிப்படையில் பெறப்படுகின்ற அறிவுகள் சரியானதாக இருக்கின்றதா? தவறுகள் ஏதும் இருந்தால் அல்லது சிக்கல் தன்மைகள் எழுமிடத்து எப்படி தீர்த்து கொள்ளலாம் என்பதன் அடிப்படையில் மெய்யியல் ஆய்வு செய்கின்றது. பொது விஞ்ஞான அறிவை எல்லோரும் ஒழுங்குபடுத்தப்பட்ட அறிவு எனவும், திருத்தமான அறிவு எனவும் நம்புகின்றோம். அவ்வாறு காணப்படின் அவ்வாறு கிடைக்கின்ற விஞ்ஞான அறிவு அனுபவ சோதனையை மையமாக கொண்டு பெறப்படுகின்ற போது எவ்வாறான இடர்பாடுகளை பெறுகின்றது. அதனை எவ்வாறு நீக்குவது, அதில் ஏற்படும் போலி தன்மைகளை எவ்வாறு களைவது போன்ற பல்வேறான தன்மையில் அறிவாராச்சியியல் என்பதனை மையமாக கொண்டு மெய்யியல் தனது பணியை மேற்கொள்கிறது.

மனிதன் அறியும் பிராணியாக இருப்பதால் இப் பிரச்சினைகளை இணங்காண்பதற்கு அவனுக்குத் தகுதியுண்டா போன்ற சிந்தனையை மெய்யியலாளர்கள் ஆரம்ப காலத்தில் கொடுத்த விளக்கங்கள் ஒன்றில் ஐயவாதம், சார்வு வாதம் சார்ந்த தொன்றாக இருந்தன.

சோக்கிரட்டிஸ் மனிதன் ஆறறிவுள்ளவர். அவனிடம் பகுத்தறிவு உண்டு. அவனுடைய பகுத்தறிவு தன்மையின் மூலம் பிராணிகளை காட்டிலும் தான் பெறும் அறிவு சரியானதாக உள்ளது என நம்புகிறான். இதன் அடிப்படையில் மனிதனால் சரியான அறிவைப் பெறக் கூடியதாக இருக்கும் எனவும் இவர் குறிப்பிட்டிருந்தாலும் நடைமுறை அறிவைச் சார்ந்த கருத்துக்கள் முழுமையான உண்மை என்று கூற வாய்ப்பில்லை.

இதனால் மனிதன் ஏற்புடைய அறிவைப் பெறமுடியாது என்றும் அறிவு என்பது போலி எனவும் ஐயவாதம் வாதிடுகின்றது. சார்வுவாதம் பொருள்களுக்கு இடையிலான தொடர்பு குறித்து அறிவைப் பெறமுடியும் என்பதே வேறு முறையில் பெற முடிவதில்லை என்பதை வலியுறுத்துகின்றது.

தீவிர ஐயவாதத்தின் தன்மையில் மனிதர் எல்லா வகையான அறிவுகளையும் பெறமுடியாது எனவும் அவற்றில் சிலவற்றை மட்டுமே அறிந்து கொள்ள முடியும் எனக் கூறுகின்ற தன்மையும் முக்கியப்படுத்தப்படுகின்றது எனலாம். சமயத்தில் காணப்படுகின்ற கருத்துக்களை ஐயப்படமுடியாது எனவும் இறைவழிபாடு, விசுவாசம் என்ற தலைப்பின் அடிப்படையில் தஞ்சம் புகுந்து கொண்டு ஐயுற முடியாத அறிவு உண்டு எனக் கூறப்படுகின்ற தன்மையை நாம் கண்டு கொள்ளலாம்.

இதன் தன்மையில் எம்மிடையே இரண்டு வினாக்கள் தோன்றுகின்றன ஐயுறப்படுகின்ற அறிவுகள் பௌதிகம் சார்ந்த அறிவுகளாகவும் ஐயுறப்பட முடியாத அறிவுகள் பௌதீக அதிதம் சார்ந்த அறிவையும் எமக்கு மெய்யியல் வரலாறு எடுத்துக்காட்டுகின்றது. ஐயுற முடியாத அறிவு நம்பிக்கை என்ற தன்மையில் கட்டியெழுப்பப்படுகின்றன. இதன் தன்மையில் இன்றும் நம்பிக்கை என்பதன் அடிப்படையில் சில அறிவுகளை விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொள்கின்றோம். இவை மரபு ரீதியான பரம்பரையின் தன்மைக்குள் உட்படுத்தப்பட்டு எம்மிடம் ஆழ்மனதில் பதிந்த நம்பிக்கைக்குரிய விடயங்களாக அமைகின்றன. இவற்றை நாம் ஏற்கின்றோம்.

அதேவேளை எம்முடைய சமூகத்துக்கும் இதனை விட்டுச் செல்கின்றோம். இவற்றை விட்டுவிடுவதா அல்லது ஏற்றுக் கொள்வதா என்பதும் சங்கடம் கொண்ட தன்மையாகவே அமைகின்றது.

நவீன காலத்தில் நம்பிக்கை, பௌதிக அதீதம் கொண்ட அறிவு என்பவற்றைக் களைந்து மனிதன் அறிவை எவ்வாறு பெறுகின்றான். அவனுடைய அறிவு எப்படி ஏற்புடையது என்பதன் அடிப்படையில் அனுபவமுதல்வாதம், அறிவு முதல்வாதம் என்ற இரண்டு போராட்டங்கள் அறிவாராட்சியில் தோற்றம் பெற்றன.

இவற்றை மையமாகக் கொண்டு அனுபவ முதல்வாதிகளும், அறிவு முதல்வாதிகளும் அறிவினை இந்த முறைகள் மூலமே பெறமுடியும் என்பதை எமக்குக் காட்டியுள்ளனர்.

இதன் தன்மையில் அறிவு முதல் வாதத்தை முன்னெடுத்துச் சென்ற மூன்று அறிவு முதல்வாதிகள் முக்கியப் படுத்தப்படுகின்றனர். டேக்கட்டி, ஸ்பினேசர், லைப்பினிஸ்ட் என்பவர்களாவர்.

அறிவு முதல்வாதிகள் மனிதன் பிறக்கின்ற போதே அறிவுடன் பிறக்கின்றான் என்றும் அவனுடைய பகுத்தறிவு என்பது அவனுடன் உடன் பிறந்த அறிவாகக் காணப்படுகிறது எனவும் எடுத்து விளக்குகின்றனர். இதன் அடிப்படையில் இருந்து வேறுபடுகின்ற அனுபவ முதல்வாதிகள் மனிதன் அனுபவ முறையின் அடிப்படையில் அறிவு பெறப்படுகின்றது எனவும் அனுபவம் புலன் சார் அல் முறையால் மட்டுமே சாத்தியம் எனவும் குறிப்பிடுகின்றனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)



## அறிவாராய்ச்சியியல்!

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அனுபவத்தை முதன்மைப்படுத்தும் அனுபவ முதல்வாதிகளாக ஜோன் லொக், ஜோர்ஜ்பாக்லி, டேவிட்கியூம் என்போர் முதன்மை பெறுகின்றனர் எனலாம்.

அனுபவ முதல்வாதிகள், மனிதன் பிறக்கின்ற போதே வெற்றுக் கடதாசி போலவே அல்லது வெற்றுக் கரும் பலகை போலவே பிறக்கின்றனர். அவனுடைய அறிவுக்கு காரணம் மனமும் புலனும் இணைந்து பெறப்படுகின்ற தகவல்களே புலப்பதிவுகள் ஆகும். அவையே அறிவைப் பெற்றுத் தருகின்றன எனலாம். இதன் அடிப்படையில் மனிதனிடத்தில் உள்ள புலன்சார் பகுதிகள் யதார்த்த தோற்றப்பாட்டைப் பிரதிபலிப்பதாக கொண்டு அமைகின்றன. இதனை முதன்மைப்படுத்துகின்ற போது தொகுத்தறி முறைமையின் அடிப்படையில் புலன்தரவுகளை ஒழுங்கமைத்து அவற்றில் இருந்து பொது உண்மைகளை முடிவுகளாகப் பெறுதல் சாத்தியம் என வாதிடுகின்றனர்.

ஆனால் மனிதன் பிறக்கும் போதே அறிவுடன் அதாவது உடன்பிறந்த உண்ணங்கள் காரணமாக அமைகின்றன. இதனால்தான் மனிதன் பிறந்தவுடன் செய்யப்படுகின்ற நிலை அவனுடைய எண்ணத்தில் இருந்து தோற்றம் பெறுகின்றது என்பதையும் காரணம் காட்டுகின்றனர். இதன் தன்மையில் இருந்து இரண்டு அறிவு சார் முறைகளுக்கும் இடையில் பல்வேறான போராட்டங்கள் நிறைந்தவையாக அறிவாராட்சியில் ஓர் திருப்பு முனையாக காணப்படுகின்றன எனலாம்.

அறிவு முதல்வாதிகள் (கருத்து முதல்வாதத்தை) முதன்மைப்படுத்துகின்றனர். ஆனால் அனுபவ முதல்வாதிகள் கருத்து முதல்வாதத்தினை முதன்மையாக மறுக்கின்றனர். அதே வேளை பொருள் முதல் வாதத்தினை ஏற்கின்றனர். இதன் அடிப்படையில் விஞ்ஞானத்துக்கு உரிய அடிப்படை வாதமாக அனுபவ முதல்வாதம் அமைகின்றது. அறிவு முதல் கொள்கையானது உண்மையான அறிவுக்கு ஆதாரமாக அமைவது.அதாவது நிலையான அறிவைப் பெறுவதற்கு ஆதாரமாக இருப்பது சிந்தனை ஆகும். அதே வேளை நியமம் கூறும் விஞ்ஞானத்தின் செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு காரணமாக அமைவது. சிந்தனைகளை சமூகமதிப்பீட்டுக்கு ஏற்றவாறு பயன்படுத்துகின்றது.

இவற்றில் உள்ளதுறைகளாக மெய்யியல், சமயம், ஒழுக்கவியல், அழகியல் போன்ற துறைகள் உண்மை பொய் என்பதற்கு மேலாக மதிப்பீட்டு பெறுமான நோக்கில் ஆய்வு செய்யக் கூடிய தன்மையில் உள்ளன. திருத்தமான முடிவைப் பெறுவதற்கு ஏதுவாக சிந்தனை முக்கியம் பெறுகின்றது. இதே நிலையில் உய்த்தறி தம்முடைய முறையாகப் பயன்படுத்தி தமது உள்ளத்தில் இயற்கையாகவே பொதிந்துள்ள கருத்துக்களின் அடிப்படை மூலம் அறிவு எழுவதாகும்.

அதாவது அனுபவத்துக்கு முதலிலேயே எமது மனம் உடன் பிறந்த அறிவுகளைக் கொண்டிருக்கின்றது. இதில் சொல்லப்படும் அறிவு நிலையானதாகும். இக் கொள்கையின் அடிப்படையில் உறுதியான நிலையான அறிவு சிந்தனை மூலம் கிடைக்கின்றது. இது புலன்சார்பற்றது. கடவுள், நன்மை, தீமை பற்றிய கருத்துக்கள் உடன் பிறந்த எண்ணங்களாக காணப்படுகின்றன என்பது அறிவுமுதல் வாதிகளின் சிந்தனையாகும்.

இவற்றில் அறிவு முதல்வாதியான ரேனே டேக்காட்டின் சிந்தனையை நோக்குகின்ற போது நவீன மெய்யியல் மற்றும் அறிவு முதல்வாதத்தின் தந்தையாகவும் இவர் காணப்படுகின்றார். இவர் விஞ்ஞான, பௌதிக அதீதம் அகநிலை சார்ந்த உண்மைகளை நிரூபிக்கும் நியம முறைகள் மூலம் நிரூபனம் செய்துள்ளார். இவரால் எழுதப்பட்டுள்ள Meditations on first philosophy of Discursion method என்ற நூலில் அடிப்படையில் காட்டீசியவாத ஐய முறையை விளக்கியுள்ளார். டேக்காட்டின் ஐயவாத நிலையானது முறையில் ஐயத்தை மையமாகக் கொண்டு பெறப்படும் அறிவை விளக்கும் நிலையில் ஐயத்துக்கு உட்படுத்தக் கூடிய எல்லாவற்றையும் ஐயத்துக்கு உட்படுத்தி ஐயம் ஏற்படாத ஒன்றைப் பெறும் அறிவை நோக்கிச் செல்ல வேண்டும் எனக் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறான ஐயவாதத்தின் முறையியலின் மூலம் எல்லா அறிவுகளையும் ஐயத்துக்கு உட்படுத்துகின்ற போதும் அவை விலக்கப்பட்டு ஐயம் முடியாத அறிவு ஒன்றுக்கு எம்மை இட்டுச் செல்லுகின்ற அறிவுக்கு எம்முடைய உடன்சார் அறிவே காரணமாகும். அதாவது பகுத்தறிவே காரணமாக அமைந்து காணப்படும். இதன் அடிப்படையில் உண்மையான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு வந்தார்.

இவருடைய ஐயுற முடியாத அறிவை நிரூபிக்கின்ற வாதமானது மிகவும் பிரபல்யமானதாகக் காணப்பட்டது.

அதாவது I think therefore I am அதாவது நான் சிந்திக்கின்றேன் ஆகவே நான் உள்ளேன் எனக் கூறுகின்ற வாதமானது தன்னுடைய இருப்பை நிறுவுவதற்கு தன்னுடைய அறிவையும் அதாவது பகுத்தறிவு நிலையையும், அகவுணர்வு சார் அறிவையும் பயன்படுத்தி உள்ளமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். டேக்காட்டின் இவ்வாதக் கருத்தானது இருமைவாதத்தை எடுத்து நோக்குகின்ற தன்மையையும் அதாவது முன்னது ஏதுவான டேக்காட்டின் உளம் உடல் பற்றிய வேறுபாட்டு தன்மைக்கும் இவ்வாதம் அடிப்படையாகக் காணப்படுகின்றது.

உடல் என்பதும் சடம் எனவும் சடமல்லாத ஓர் வஸ்துவாகவே உளத்தையும் எடுத்து விளக்கினார். இதன் அடிப்படையில் சடத்தை நிரூபனம் செய்வதற்கும் தன்னுடைய இருப்பாகிய உள்ளத்தை அல்லது அகம் சார் எண்ணத்தை எடுத்து விளக்குவதற்கும் இந்த வாதத்தைப் பயன்படுத்தி உள்ளமையும் உடல் என்பது ஓர் சிக்கல் தன்மை கொண்ட ஓர் பொறிமுறை எனவும் இதன் தொழிற்பாடுகள் ஒலி, ஒளி போன்ற தூண்டல்களுக்கு உட்படுத்தக் கூடியதென வும் எடுத்துக் காட்டும் தன்மையில் உளமானது செயற்பாட்டுக்கு காரணமாக உள்ளது என விளக்குகின்றார்.

அதே வேளையில் உடலையும் உள்ளத்தையும் வேறுபடுத்திக் காட்டும் நிலையும் உடன் பிறந்த எண்ணங்கள் மூலம் சாத்தியம் எனவும் கூறுகிறார். மனிதன் பிறக்கின்ற தன்மையில் உடலுறை எண்ணங்கள் காணப்படுகின்றன. இத்தன்மையில் மனிதன் தன்னுடைய அறிவை மேலும் வளர்த்துக் கொள்கிறான். எவ்வகை அறிவைப் பெறுவதற்கும் காரணமாக பகுத்தறிவு என்பது முக்கியமானதாகும் எனக் குறிப்பிடுகிறார். இதனால் இவருடைய வாதமானது 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் ஓர் திருப்பு முனை கொண்ட அறிவாராய்ச்சித் தன்மையில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

டேக்காட்டினைத் தொடர்ந்து ஸ்பினோசா அறிவு முதல்வாதத்தின் பெரும்பங்காளியாக விளங்கினார். அறிவியல் எனப்படும் 'எதிகா' என்ற நூல் அவரது சிந்தனையை முழுமையாக பிரதிபலித்துக் காட்டுகின்றது. மனித அறிவில் இருவகையான கருத்துக்கள் உள்ளன. முதல் வகை

(9ஆம் பக்கம் பார்க்க)

## அறிவாராய்ச்சியியல்!

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)


யானவை புலன் உணர்ச்சிகளை மையமாகக் கொண்டவை. இரண்டாவது தன்மையில் ஒரு புறம் உலகு மறுபுறம் புலன்களும் என இரட்டைத் தொடக்கத்தைக் கொண்டவை. இவை இரண்டினாலும் கிடைக்கும் புலனறிவுக் கருத்துக்கள் ஒழுங்கற்ற அனுபவங்கள் என ஸ்பினேசா கூறுகின்றார். புலனறிவுக் கருத்துக்களில் தெளிவு இருக்காது. அதேவேளை நிலைத்த பண்பும் இருக்காது. மேலும் குழம்பியிருக்கும் புலனறிவுக் கருத்துக்களில் தெளிவை ஏற்படுத்த நம்பிக்கைகள் உதவுகின்றன எனக் குறிப்பிடுகின்றார்.

மேலும் மனித அறிவு தர்க்க ரீதியானது என்றும் சிந்தனை ரீதியானது என்றும் குறிப்பிட்டால் அறிவு எவ்வகையிலும் உணர்ச்சி வசப்பட்டதல்ல. தனி மனித தாக்கங்கள் அதிலிருப்பதில்லை. அதாவது தற்சார்வு நிலை இருப்பதில்லை. கருத்துக்கள் சர்வாம்சப் பண்பு கொண்டவை. தர்க்க ரீதியாக பரஸ்பரத் தொடர்பு கொண்டவை. ஒன்றிணைந்த அமைப்பாக தம்மை உருவாக்கிக் கொண்டவை. இவையே அறிவு மற்றும் உண்மையின் அளவுகோல்கள் என ஸ்பினேசாவால் கொள்ளப்படுகின்றன.

ஸ்பினேசாவால் கூறப்படும் உள்ளுணர்வு புதுவடிவம் பெறுகிறது. இவ்வகையான அறிவு சுய இருப்புக் கொண்டவை. உலகின் சாரம் பற்றியவை உள்ளுணர்வின் மூலம் நிறையக் கருத்துக்கள் கிடைக்கின்றன. மனிதன் உலகின் சர்வாம்ச முழுமையை உணர்கின்றான். சகலதும் சகலவற்றுடனும் உறவு கொண்டலை.தன்னந்தனியானது எதுவும் இல்லை எனவும் உணர்கிறான். புலனறிவு மூலம் இவ்வாறான உண்மையைப் பெறமுடியாது. இதன் அடிப்படையில் அறிவும் உலகின் இருப்பும் ஒரு நிலையில் சமப்படுத்தப்படுகின்றன. உலகு அறிவு மயமானது என்றும் அறிவு உலக ஒழுங்கு போன்றது என்றும் கூறும் போது அவை ஒன்றையொன்று நெருங்கி வருகின்றன என்பதை ஸ்பினேச முக்கியப்படுத்துகின்றார்.

ஸ்பினேசாவுக்கு பின்வந்த அறிவு முதல் வாதியான லைப்பினிஸ்ட் உண்மையான அறிவு தன்னிலிருந்தே எழுவதாகும் என்கின்றார். நமது அறிவு மனதில் ஒடுங்கி புத்தியில் உள்ளது. அனுபவம் அறிவை உருவாக்கவில்லை. அறிவே அனுபவத்தால் வெளியாக்கப்படுகின்றது. தெளிவுபடுத்துகின்றது. புலன்களால் கிடைக்கப் பெறுகின்ற அறிவு என்பதை ஏற்றுக் கொள்ளாது. உடன்பிறந்த எண்ணங்கள் உள்ளத்தில் ஒடுங்கி நிற்கின்றன. அனுபவத்தினாலேயே தெளிவடைவதுடன் வெளிப்படையாகவும் பெறுகின்றன என்று உணர்த்தினார். இதன் தன்மையில் உடன் பிறந்த எண்ணங்கள் உண்டு என்றும் உண்மையான அறிவு உள்ளத்தில் இருந்தே எழுகின்றது. அத்தகைய அறிவு புறத்திலிருந்து எழுகின்றன என்பது கட்டுக்கதையே என்றும் குறிப்பிடுகின்றார். இவர்கள் அறிவு முதல்வாதிகளாகக் காணப்பட்டாலும் அனுபவ முதல்வாதத்தையும் இணைக்கும் நோக்கில் செயற்படுகின்றனர். முதல் வாதியான ஜோன் லொக்கின் சிந்தனைகள் எப்போதும் அனுபவம் சார் முறையின் அனுபவ மூலமே அறிவைப் பெறுகின்றோம் என்றும் பிரித்தானியாவில் அனுபவம் சார் அறிவே முதன்மையானது எனக் கூறிச் செல்லும் லொக் எல்லா அறிவும் சில அளவையியல் கணிதவியல் விதிகளைத் தவிர அனுபவத்தினையே எமக்குக் கிடைக்கின்றது எனக் கூறுகின்றார்.

அறிவாராட்சியின் வரலாற்றில் இது ஓர் புரட்சியாகவே கருதப்படுகின்றது. இவரால் எழுதப்பட்டுள்ள மனித நிலையில் புரியும் ஆற்றல் என்ற நூலை, புற உலகுப் பற்றிய அறிவைஅனுபவத் தன்மையிலிருந்தே தொடங்குகின்றார்.



புலன்கள் மூலமாகவே அமைத்துக் கொள்கின்றோம். அதுமட்டுமல்ல பௌதிக அதிதம், கடவுள் பற்றிய அறிவையும் புலன் உணர்ச்சி மூலமே அறிந்து கொள்கின்றோம். இதன் அடிப்படையில் உடன்பிறந்த எண்ணங்கள் என எதுவும் இல்லை என்ற டேக்காட்டின் சிந்தனைகளை மறுக்கின்றார். முதன் முதலாக அனுபவம் சார் அறிவை ஏற்புடைய அறிவாக ஏற்றுக் கொள்ளும் போக்கு பிரித்தானிய அனுபவ முதல் வாதத்தின் தந்தையாக கருதப்படும் லொக்குடன் ஆரம்பமாகின்றது. லொக் எல்லா அறிவும் சில அளவையியல், கணிதவியல் விதிகளைத் தவிர அனுபவத்தாலேயே எமக்கு கிடைக்கின்றது எனக் கூறினார்.

அறிவாராய்ச்சியியல் வரலாற்றில் இது ஒரு புரட்சியாகவே கருதப்படுகின்றது. லொக் தம்முடைய காலத்தில் அறிவைப் பற்றிய சிக்கல் தன்மையை ஆராயத் தொடங்கியதன் விளைவாக மனித நிலையில் புரியும் ஆற்றல் (An essay concerning human under-standing - 1690) என்ற நூலை எழுதினார். இந்நூலில் எண்ணங்களின் தோற்றத்தை அறிதலின் பொருட்டும், உறுதியான அறிவு யாது என்றும் அறிவின் பரப்பு யாது எத்தகையது என்றும் இதற்குரிய ஆதாரங்கள் யாவை எனவும் மெய்யியலின் மனித அறிவாற்றலின் எல்லைகளை வரையறை செய்யும் வகையில் அறிவாற்றலுக்கு விளங்குவனவற்றை நீக்கி விட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

டேக்கார்ட் போன்ற அப்பால் அறிவு முதல்வாதிகளின் கோட்பாடுகளை எதிர்த்து, குறிப்பாக அவர்களின் உடன் பிறந்த எண்ணங்களை விமர்சிப்பதாக அவரின் கருத்து அமைகின்றது.

புற உலகு பற்றிய சடப்பொருள்வாத அனுபவக் கொள்கையை முன்வைத்தார். புற உலகு பற்றிய அறிவு அனுபவத்திலிருந்தே தொடங்குகின்றது என்று அதனது இருப்பை ஏற்றுக் கொண்டதுடன் அதிலிருந்து புலன்கள் மூலமாக அவை பற்றிய அறிவைஅமைத்துக் கொள்ளலாம் என்றார்.

எண்ணங்கள் அறிவினது எல்லைத் தன்மை, கடவுள், இருப்பு, பௌதீக வதிதம் ஆகியவற்றது கருத்துக்களையும், அவையிட்ட அறிவுகளையும் எமது புலனுணர்ச்சி மூலமே பெறலாம் என்றார்.

அறிவு எவ்வாறு முடிவுகளை அடைகின்றது என்ற முறையை ஏற்கும் முன்னர் அறிவைப் பற்றியும் உண்ணங்களைப் பற்றியும் ஆராய விரும்பினார். முன் எண்ணமாக எதனையும் ஏற்றுக் கொள்ளவில்லை. அனுபவத்தால் உண்மையென ஆராய்ந்து மெய்ப்பிக்கப்படாத எதனையும் உண்மையென ஏற்க மறுத்தார். டேக்கார்ட்டினது கருத்திலிருந்து மனிதனோடு உடன் பிறந்ததாக எண்ணப்படுகின்ற அறிவினது தன்மையை மறுத்து (எண்ணங்கள் புலன்கள் வாயிலாக பெறப்படுகின்றன என்ற கருத்தைக் கூறினார்) மனிதனது மனதை வெள்ளைக் கடதாசிக்கு ஒப்பிடுகின்றார்.

மனித மனம் அவன் பிறக்கும் போது வெற்றுக்கு ஒப்பாக இருக்கிறது. மனிதன் அனுபவங்களைப் பெறும் போது அதில் பதிவு செய்கின்றான் என்றார். எனவே அனுபவத்துக்கு முந்தியதாக எதுவும் மனதில் இல்லை.

புலன்களால் பெறப்படுபவை எளிய எண்ணங்கள், இவற்றைத் தொடர்பு படுத்துவதன் மூலம் சிக்கலான எண்ணங்கள் பெறப்படுகின்றன. எனவே மனித அறிவின் வேறுபட்ட துறைகள் சிக்கலான எண்ணங்கள் யாவும் எளிய எண்ணங்களைத் தொடர்புபடுத்தி பெறப்பட்ட என்பது இவர் கருத்து.

லொக்கின் இக்கருத்துக்கள் அறிவொளிக் காலத்துக்கு ஆரம்ப வித்துகளாக அமைந்தன. மேற்கூறிய கருத்தை இன்னும் தெளிவாகக் கூறுவதால் மனித மனம் என்பது புதிதாகப் பிறந்த குழந்தையை, எதுவும் எழுதப் பெறாத ஓர் வெற்றுக் கடதாசியை போன்றதாகும். பின்னர் இவற்றில் இந்த பரந்த உலகினூடாக அவள் பெற்றுள்ள எண்ணங்களைத் தமது அனுபவம் மூலம் கண்டு பதிய வைக்கிறான்.அதன் பின்னர், அனுபவம் விரிவடைந்து அவனது சிந்தனைக்குத் தேவையான அறிவுகளைப் பெறுகின்றது. எனவே அதிலிருந்துதான் ஏனைய

(10ஆம் பக்கம் பார்க்க)

**அறிவாராய்ச்சியியல்!**
**(09ஆம் பக்கத் தொடர்ச்சி)**

புலனுணர்வுகள் எண்ணங்கள் எழுவதாகக் குறிப்பிடுகின்றான். இவற்றினைக் கொண்டே புறப் பொருள்களின் உண்மையை உணர்கின்றான். உண்மையான தூண்டப்படும் போது புலன்றிவுகள் தோன்றுகின்றன. இவை பொருள்கள் எண்ணங்களை பிறப்பிக்கின்றன.

எண்ணங்கள் பற்றிய அறிவை மனிதன் புலனுணர்ச்சிகள், ஆழ்ந்த எண்ணங்கள் மூலம் பெற்றுக் கொள்ள முடிகின்றது. சிந்தனைக்குத் தேவையான அனைத்தையும் அதன் கருவிகளையும் கூட அனுபவம் எமக்குத் தருகின்றது. ஒரு பொருளைப் பற்றிய பலவிதமான கருத்துக்களை எமது புலனுணர்வுகளே அளிக்கின்றன. சுருக்கக் கூறின், கருத்துக்களின் பிறப்பிடம் புலனுணர்வுகளாகும். எண்ணங்கள் அனுபவத்திலிருந்து பெறப்பட்டு உள்ளத்தில் பதிவுகளாகின்றன என்றும், அவை எமது அறிவுக்கு அடிப்படையாகவும் மூலமாகவும் உள்ளன என்றும் அறிவிக்கிறார். மேற் கூறிய வழிகளில் கிடைக்கப்பெறும் எண்ணங்கள் எளிமையாகவும் எளிய எண்ணங்கள் பல கூட்டுச் சேர்ந்து உருவாக்கப்பட்டு விடுகின்ற கூட்டு அல்லது சிக்கலுடையதாகவும் ஏற்பட்டு விடுகின்றன என எண்ணங்களைப் பிரித்தும் விளக்குகின்றார்.

எமது அறிவின் இயற்கைத் தன்மை, அதனது பண்பு, பரப்பு, எல்லைகள் என்பதையிட்டு அறியப்படும் போது எண்ணங்கள் சிலவற்றில் எளிமையும் சிலவற்றில் சிக்கல் தன்மையும் காணப்படுவதாகவுள்ளது. நிறம், வடிவம், அளவு, திண்மை, இயக்கம் ஆகியவற்றையும் இவை போன்றவை புலன்களின் வாயிலாக முதலில் மனதில் பதிகின்றன.

இவ்விதம் பதிவாகும் எண்ணங்கள் எளிய எண்ணங்களாக, கலப்பற்றதாக இருக்கும். உதாரணமாக நிறம், ஒளி, சுவை, நாற்றம் என்பன போன்ற எண்ணங்களைக் குறிப்பிடலாம். அடுத்து ஒன்றுக்கு மேற்பட்ட புறப்புலன்கள் மூலம் கிடைக்கக் கூடியதாக சில எண்ணங்கள் உள்ளன. அவை பார்த்தல், தொடுதல் போன்ற உணர்வுகளால் கிடைப்பவை எனலாம். இவை பரப்பு, உருவம், இயக்கம் பற்றிய எண்ணங்களாகும். புறப்பொருள்களில் ஏற்படும் உடனடி அனுபவங்களால் புலனுணர்ச்சியால் உருவாக்கப்படும் தனி நிலையான அல்லது எளிய எண்ணங்களே இத் தகையதாகும்.

வெற்று நிலையாக உள்ள மனதில் ஏற்படும் எளிய எண்ணங்கள் பலவற்றின் தொடர்பாக கூற்று அல்லது சிக்கல் தன்மை வாய்ந்த எண்ணங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இது வெளிப்புற பொருள்களிலிருந்தும் தம் எண்ணத்திலும் இவ்விதம் ஒன்று பட்டு எண்ணங்களை உருவாக்குதல் மனிதன் தொழிற்பாடாக உள்ளது. இச்சிக்கலான எண்ணங்கள் யாவும் எளிய எண்ணங்களால் உருவாக்கப்பட்டதேயன்றி தனித்து சிக்கலாக தோன்றுவதில்லை.

எடுத்துக்காட்டாக அழகு, பிரபஞ்சம், மனிதன் என்பன பல்வேறு எளிய எண்ணங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஓர் எண்ணமாகும். இதில் சிக்கல் தன்மை கூட்டான தன்மை காணப்படுவதால் அவ்விதமான எண்ணங்களாகத் தோன்றுகின்றன. இங்கனமாக எண்ணங்கள் மாறு நிலையுடையதாகவும் பொருள்களைப் பற்றி அதனைத் தாங்கியதாகவும் ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட உறவு நிலைகளைக் கொண்டதாகவும் இருக்கும் என்றார் லொக்.

எண்ணங்கள் பலவற்றை ஒருவன் அனுபவிக்கின்ற போது சிக்கலான எண்ணம் தோன்றுகின்றது. எடுத்துக்காட்டாகப் பெரிய நீண்ட திண்மையான கறுப்பு நிற மேசை என்ற கருத்து சிக்கலானதாகும். மனதின் தொழிற்பாடு இன்றி நேரடியாகப் புலன்கள் வாயிலாகப் பெறுகின்ற எளிய எண்ணங்கள் உண்மையாக இருக்கின்றன. இவற்றைப் போன்று சிக்கலான எண்ணங்கள் இருக்காது. புறப்பொருள்கள் குறித்து நாம் பெறும் அறிவு சிக்கலான எண்ணங்களால் பிழையுடையதாகலாம் எனக் கருதுகிறார். ஆக எளிய எண்ணங்கள் உண்மைப் பொருள் பற்றிய அறிவைத் தருகின்றன என்கிறார்.

இங்கனம் கருத்துக்களில் காணும் சிக்கல் நிலையையும் எளிமையையும் பாகுபடுத்தி லொக் அவைகள் யாவும் எமது புலனுணர்ச்சிகள், ஆழ்ந்த எண்ணுதல் என்பவற்றால் பெறப்படுகின்றன. எனினும், பொருள்களில் காணும், காணப்படுகின்ற சில குறிப்பிட்ட பண்புகளினாலும் கிடைக்கப் பெறுகிறது என்கிறார். எமது உள்ளத்தில் ஏற்படுத்தப்படும் எந்த எண்ணங்களையும் உற்பத்தி செய்யக் கூடியதான சக்திகளை பொருள்கள் தம்மில் கொண்டுள்ளன.

இவை பொருள்களுக்கே உரித்தான பண்புகள், தரம் அல்லது தன்மையாகும். இது பொருளின் திறமையெனக் கொள்கிறார்.இங்கனமான பண்புகள் சில பொருள்களின் அமைப்பிலேயே உள்ளவையாக உள்ளன. பொருள்களில் தங்கியிருக்கும் இப் பண்பை அவற்றிலிருந்து பிரிக்க முடியாத இப் பண்பை முதல் நிலை அல்லது மூலப் பண்புகளான பரப்பு, உருவம், இயக்கம் அல்லது இயக்கமின்மை என்பனவற்றை அதன் அமைப்பின் பண்பிலிருந்து பிரிக்க முடியாது. உதாரணமாக பொதுமையைக் கூறுகின்றார். தானியம் இரண்டு துண்டுகளாக்கப்பட்டாலும் ஆலையில் அரைத்தாலும் பல அதன் பண்பு இருக்கும். இம்முதல் நிலைப் பண்பானது தனித்த இருப்புடையதுவேயாகும். இதுவே ஆரம்ப அதன் அமைப்பில் அனுபவத்துக்கு அயலாக பண்பாகவுள்ளது. இப்பண்புகளைக் கொண்டு பொருள்களது குணவியல்புகளையும் தன்மைகளையும் அனுபவித்து கொண்டு அதாவது, அப் பொருளை எமது புலன்களால் கண்டு கொள்வது மூலம் பெறக்கூடியதாகவுள்ளது.

இவ்விதமான மூலப் பண்பிலிருந்து பலவித புலனுணர்வுகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும். சுவை, மணம், ஒலி, நிறம் போன்ற உணர்வுகளைப் பெறலாம். இவை முதனிலைப் பண்புகளால் வழிநிலைப்பண்புகள் எழுப்பப்படக் கூடியவையாகும். இவற்றுக்கு இரண்டாம் தரமானவை என லொக் பெயரிடுகின்றார்.

இவ்வழி நிலைப் பண்பானது அகநிலையைச் சார்ந்திருப்பதால் புலன்களால் அறியக் கூயது என அனுபவிக்கும் அனுபவக் கருத்துக்கு முரண்பட்டதாக அமைகின்றது. உதாரணமாக ஒரு மெழுகுவர்த்தியின் தீச்சுடரை நாம் நோக்கும் போது அது எமக்குத் தரும் அனுபவ கருத்தானது, அதனைத் தீச்சுடரான முதனிலைப் பண்பேயாகும். அதனைத் தொட்டவுடன் எமக்கு சூடு என்ற உணர்ச்சி ஏற்படுகின்றது. இது முதனிலைப் பண்பால் கிடைகப்பட்ட பொருள்களில் உள்ள வழிநிலைப் பண்புகள் என லொக் கூறுகிறார். இவை அக நிலையைச் சார்ந்தவையாயினும் எமக்குப் புலன்கள் மூலம் எண்ணங்கள் ஏற்படுத்தி மனதில் பதிய வைக்கின்றன. ஆக பொருள் பற்றிய எண்ணத்தை முதல்நிலை, வழிநிலைப் பண்புகளால் பெறக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறு பொருள்களுக்கு ஆதாரமாக இருக்கும் பண்புகளையும், பொருள்களைச் சார்ந்து நிற்கும் பண்புகளையும் கொண்டு, புலனுர்ச்சிகள், ஆழ்ந்து எண்ணுதல் மூலம் பொருள் பற்றிய உண்மையை அறிய முடிகின்றது.

அன்றில் எண்ணங்கள் எனக் கூறக்கூடிய உண்மைப் பொருள் பற்றிய எமது அறிவு உடன் பிறந்தவையாகவோ ஏற்கனவே நம் மனதில் பதியப்பட்டவையாகவோ ,ல்லைஎருபவ் யாவும் எமது அனுபவம் மூலம் மேற்கூறப்பட்ட வழிகளில் பெறப்படுவதே ஆகும். ஆகையால்தான் டேக்கார்ட் கூறிய உடன் பிறந்த எண்ணங்களை குறையாடுடையதாகக் கூறுகிறார். இவ்வாறாக லொக் தம் காலத்தில் எழுந்த புலன்களுக்கு முன் அறிவு பெறப்படுகின்றது என்ற கொள்கைக்கு எதிராக அனுபவ வாதக் கொள்கைக்கு உளவியற் பாங்கான முறையில் எண்ணங்களின் ஏற்புடைமையைத் தீர்மானித்தது சிறப்புடையது எனலாம்.

லொக்குக்குப் பின்னர் ஐரோப்பிய மெய்யியல் வாதிகளில் பார்க்லி அனுபவக் கருத்துக்களை கூறுவதில் சிறப்பிடம் பெறுகிறார். அறிவைப் பற்றி லொக் ஏற்றுக் கொண்ட அடிப்படைக் கருத்துக்களைப் பயன்படுத்தி. சடக் கொள்கையையும், இறையியல் கொள்கைகளையும் பார்க்லி மறுத்தார். எமது உள்ளமானது வெற்றுப் பலகையைப் போன்றது. புறத்தே பொருள்கள் இயங்குகின்றன. அவற்றினது பண்புகள் எமக்குப் புலனுணர்வைத் தருகின்றன. ஆகையால், நாம் அதன் மூலம் சடப்

**(11ஆம் பக்கம் பார்க்க)**

## அறிவாராய்ச்சியியல்!
(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருள்கள் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்கிறோம் என்று லொக் உரைத்த கருத்தை மறுப்பதிலும் பார்க்லி தனது கருதுகோளை அமைக்கிறார். எனவே, லொக்கினது உள ரீதியான தர்க்க முறையையும் ஏற்கிறார். அத்துடன் எண்ணங்கள் புலனுணர்ச்சியால் எழுபவை என்றும் கற்பனையால் எழுபவை என்றும் பிரித்து புலனுணர்ச்சியால் எழும் எண்ணங்கள் உள்ளத்தைச் சார்ந்துள்ளன என்றும் அவற்றுக்கு காரணமாகக் கடவுள் இருப்பு உள்ளது என்றும் கூறுகிறார். இவர் ஆன்மா பற்றியும் கடவுள் பற்றிய எண்ணக்கரு ஓர் அகக் காட்சி மூலம் பெறக்கூடியது எனவும் ஏற்றுக் கொள்கிறார். புறப்புலக் காட்சியையும் அகப்புலக் காட்சியையும் பார்க்லி வலியுறுத்தினார். லொக் கூறிய எண்ணங்கள் பற்றிய கருத்தை அவர் புலனுணர்ச்சியால் எழுபவை, கற்பனையால் எழுபவை என இரண்டு வகையாகப் பிரிக்கிறார். கற்பனையில் எழும் எண்ணங்கள் எமது உள்ளத்தைச் சார்ந்தே உள்ளன. எமது உள்ளத்தோடு தொடர்புடையதாக உள்ளன. ஆனால் புலனுணர்ச்சியால் எழுபவை உள்ளத்திலிருந்து எழுபவையல்ல. அது எமக்கு அப்பாற்பட்ட ஒன்றால் உருவாக்கப்பட்டதே இவ்வாறு பார்க்லி எண்ணங்களைப் பற்றியும் எண்ணங்கள் புறப் பொருளால் உருவாக்கப்படுகின்றன என்றும் அவற்றுக்குக் காரணம் கடவுள் என்றும் எண்ணங்கள் நாம் அறியாத பொது எல்லையற்ற அன்மாவின் உள்ளத்திலிருக்கின்றன. என்றும் ஏற்றுக் கொள்வதால் அவர் அகநிலைக் கொள்கையிலிருந்து புற நிலைக் கருத்துக் கொள்கையை வலியுறுத்தகிறார். ஆக பார்க்லி அனுபவ வாதத்துக்கு உரிய அடிப்படைக் கருத்தில் ஒரு வகை சிக்கல் தன்மையை புரிய வைக்கிறார் எனலாம். லொக்கை விட பரந்த முறையில் அனுபவ வாதக் கருததை எடுத்தாள்வதும் அறியத் தக்கது.

லொக்கை அடுத்து அனுபவத்துக்கு முழு உருவம் கொடுத்தவராக ஹியூம் அடையாளப்படுத்தப்படுகின்றார். இவரும் லொக்கின் கோட்பாடைத் தழுவி உளவியல் பாங்கான முறையில் தெளிவான அறிவை அனுபவ வாதத்துக்கு அளிக்கிறார். மனிதனின் அறியும் ஆற்றல் பற்றிய ஆராய்ச்சியை லொக்கைப் போலவே ஹியூமும் கூறுகிறார். அனுபவ வழிக் கொள்கையை வலியுறுத்திய இவர் புலனுணர்ச்சி, ஆழ்ந்த எண்ணுதலால் பெறப்படும் விவரங்களையே எமது அறிவு சார்ந்துள்ளது என்றார். லொக் பாவித்த உண்ணம் என்ற கருத்துக்கு பதிலாக ஹியூம் புலக்காட்சி அறிவு என்று அறிமுகப்படுத்துகிறார். புலக்காட்சியை நாம் பெறும் எண்ணங்கள், உட்பகுதிகள் என வகுத்து உட்பகுதிகள் எனக் கூறக் கூடியவைகள் எமது உள்ளத்தில் முதன் முறையாக எழுகின்ற புலனுணர்ச்சி, மனவெழுச்சிகள் போன்றவைகளாகும் என்கிறார். புறத்தே உள்ளவைகளில் இருந்து எமது உட்பகுதிகளாக சில புலனுணர்வுகள் கிடைக்கின்றன. அவை அகத்தில் பதியப்பட்டு எண்ணங்களாகின்றன என ஹியூம் கூறுகிறார். உட்பதிவுகள் புலன்களைத் தாக்கும் போது இன்பம், துன்பம், சூடு, குளிர்ச்சி போன்ற உணர்வுகளை அதாவது சூடு, குளிர், இன்பம், மென்மை போன்றவைகளைப் பற்றிய அறிவைத் தருகிறது.

இங்கனமாகப் பெறப்படுபவை சிலவற்றுக்குக் காரணமாக அமைந்து விடுகின்றன. என காரண காரியத் தொடர்பை ஹியூம் அறிமுகப்படுத்துகிறார். காரணகாரிய முறையை எண்ணங்களின் இயைபாகக் கருதினார். இத்தகைய காரண காரியம் பற்றிய அறிவும் அனுபவம் மூலமே பெறப்படுகின்றது என எடுத்துரைத்தார். அவறோடு காரணகாரிய உறவு எனக்கூறுவதில் அதனிடையே கட்டாயத் தொடர்பும் இன்றியமையாதது என்கிறார். இவ்வித காரண காரியம் பற்றிய அறிவை எமது புலசார்பின்றி அறிய முடியாது ஏனெனில் ஒரு பொருள் நிகழ்வதற்கு முன் அதனை அறிந்திருக்க வேண்டும். உதாரணமாக நெருப்பானது சுடும் நீர் குளிர்ச்சியானது என்பதை ஏற்கனவே அறியப்பட்டதாக இருக்க வேண்டும். இவற்றை நுகர்ச்சியால் அன்றி புலனுணர்ச்சியாழ் மாத்திரம் அறிய முடியாது என ஹியூம் வலியுறுத்திக் கின்றார். பொருள்கள் ஒன்றோடு ஒன்று கட்டாயமான உறவை புற உலகில் பெற்றிருக்கவில்லை. ஆனால் எண்ணங்களோ நம் உள்ளத்தில் இயைபு மீண்டும் நிகழ்தல் என்ற பழக்கத்தின் விளைவு ஆகும். இதில் நாம் பெற்றுகொள்வது சட்ட ரீதியான கட்டாயமன்று. ஆனால் அவை நுகர்ச்சியை அல்லது அனுபவத்தை அடிப்படையாக கொண்ட தர்க்க ரீதியான கட்டாயமே ஆகும் என்கிறார். மேலும் ஹியூம் சடப் பொருளை நாம் நேர்முகமாக அறிய வில்லை என்றும் லொக் கூறியதை போல் சட பொருள் பண்பு கொண்டது என கருதுவதும் தவறானது என எண்ணினார். அது போல எண்ணங்களை தாங்குவதற்காக கொல்லப்படுகின்ற ஆன்மாவைப் பற்றிய கருத்தையும் மறுக்கிறார். ஆன்ம என்பது எமது புலன்கள் பெரும் காட்சிகளின் கூட்டுத் தொகையாக உள்ளது. ஆன்மாவை பற்றியகருத்தைமறுத்தாலும்உளம்என்ற ஒன்றிருப்பதாக ஏற்றுக்கொள்கிறார்.

உளவியல் வளர்ச்சி மேலோங்குவதற்கு ஓரளவு ஹியூம்ன் முறை காரணமாக இருந்தது. இவ்விதம் லொக் இணை தொடர்ந்து வந்த அனுபவ வாதம் மேலும் தெளிவும் விரிவும் உடையதாக ஹியூம் வலியுறுத்திய கருத்தில் அறிய கூடிய தாக உள்ளது. இருந்த போதும் ஹியூம் அறிவு பற்றி லொக் பார்க்லி ஆகியோர் கையாண்டதை விட ஓர் ஐயத்தன்மையை உருவாக்குறார். மேலும் உடல் உளம் பற்றிய கருத்தையும் கொண்டிருந்த படியால் ஓர் இருமை வாதியாகவும் இணங்கப்படுகிறார்.

நி.அஃப்றின்,
மெய்யியல் துறை, இறுதியாண்டு,
பேராதனை பல்கலைக்கழகம்.




வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
“ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர,
மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்.”
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# நீர் வெறுப்பு நோய் விழிப்புணர்வு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதார, மிருக வைத்திய சேவைப் பிரிவால் நடைமுறைப்படுத்தப்படும் 'இலங்கையை நீர்வெறுப்பு நோயற்ற ஒரு நாடாக மாற்றுவோம்' எனும் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வு மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில், பொதுச் சுகாதார மிருக வைத்திய சேவைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் தர்ஷானி திசாநாயக்கவின் பங்கேற்புடன் பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.



இதன்போது விசர் நாய்க்கடி நோய் தொடர்பான விளக்கம், நோய்த் தடுப்பு தொடர்பான வழிமுறைகள், எம்மால் கடைப்பிடிக்க வேண்டிய சமூகப் பொறுப்புக்கள் மற்றும் பிற விலங்குகளின் நோய்த் தொற்றுகளிலிருந்து தவிர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் பொதுச் சுகாதார மிருக வைத்திய சேவைப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் தர்ஷானி திசாநாயக்க, மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் வை.சி. குருகே மற்றும் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர். டீ.எச்.ஏ. அதிகாரி ஆகியோரால் விழிப்புணர்வுக் கருத்துகள் வழங்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் பொதுச் சுகாதார மிருக வைத்திய சேவைப் பிரிவின் உத்தியோகத்தர்கள், களுவாஞ்சிகுடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (திட்டமிடல்), சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# மரநடுகை தினம் அனுஷ்டிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசிய மர நடுகை தினத்தை முன்னிட்டுக் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) சுற்றாடல் குழுவின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் விஞ்ஞான பாட இணைப்பாளருமான ஆசிரியை எம்.ஐ. ஜ·வைரியா தலைமையில் மரம் நடுகை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்லூரியின் முதல்வர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் கலந்துகொண்டு மரக்கன்றுகள் நட்டார்.

இந்த நிகழ்வில் பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம். சமதா மசூது லெவ்வை, ஏ.எச் நதிரா, உதவி அதிபர்களான எம்.எஸ் மனூனா, என்.டி நதீகா, பகுதித் தலைவர்கள், கல்லூரியின் சுற்றாடல் குழு உறுப்பினர்கள், விஞ்ஞான பாட ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# மட்டு. தாதியர் கல்லூரியில் இரத்ததான முகாம்!





(பழுவூரான்)

மட்டக்களப்பு தாதியர் பயிற்சிக் கல்லூரியின் 45 ஆவது கல்லூரி தினத்தை முன்னிட்டு தாதிய மாண வர்களால் மாபெரும் இரத்ததான நிகழ்வு வெள்ளிக்கிழமை (17) தாதியர் கல்லூரி யில் மண்டபத்தில் இடம் பெற்றது .

இதன்போது 50 இற்கும் மேற்பட்ட குருதிக் கொடையாளர்கள் இரத்த தானம் செய்தனர்.

இந்த் இரத்ததான முகாமுக்கு அனு சரணையாளராக மட்டக்களப்பு மாவட் டத்தில் பல்வேறுபட்ட சமூக பணிகளை மேற்கொண்டு வரும் ஹெல்ப் எவர் அமைப்பு செயற்பட்டது.



# மன்னாரில் இரண்டாவது தென்னை முக்கோண வலயம்

(மன்னார் நிருபர்)

நாட்டின் இரண்டாவது தென்னை முக்கோண வலயம் வடக்கு தென்னை முக்கோண வலய பயிர்செய்கை நடவ டிக்கை மன்னாரில் ஆரம்பித்து வைக் கப்பட்டுள்ளது.

இந்தத் தென்னைகளை நடும் நிகழ்வு நேற்று முன்தினம் மன்னார் ஆன்டாங்குளம் பாடசாலையில் ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய , ஒரு லட்சம் தென்னம் பிள்ளை களை நடும் நிகழ்வு முன்னெடுக்கப் பட்டது.

சி.ஐ.சி. அக்ரிபிஸ்னஸ் நிறுவ னத்தின் சமூக மேம்பாட்டுக்கான பொறுப்புடன் கூடிய செயலாற்றுகை யின் மூலம் இந்த நிறுவனமானது வடமாகாணத்தின் புதிய தெங்கு முக் கோண வலய விருத்தியை எளிதாக்கி வடக்கின் தெங்கு முக்கோண வலயம் மற்றும் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்தவும், தெங்குச்செய்கையா ளர்களின் வாழ்வியற் பொருளா தாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

பாடசாலை மாணவர்களை ஊக்கு விப்பதன் ஊடாக இதனை விருத்தி செய்வதில் பங்களிப்பு செய்து வரு கின்றது.





# அக்கரைப்பற்றில் கலை இலக்கிய விழா!

(எம்.எப்.நவாஸ்)

அக்கரைப்பற்று கலை இலக்கியப் பேரவை இணைந்து பேரவையின் தலைவர் ஊடகவியலாளர் கலா பூஷனம் மீரா இஸ்ஸத்தின் தலைமையில் அக்கரைப்பற்று கலை இலக்கியப் பெருவிழா அதாவுல்லா அரங்கில் நேற்று (18) சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கங்கள் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து இந்த விழா நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா கலந்து கொண்டார்.



கௌரவ அதிதிகளாக கிழக்கு பண்பாட்டலுவர்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.நவநீதனும் அம்பாறை மாவட்ட மேலதிக அரசஅதிபர் ஜே.ஜெகதீசன் மற்றும் பிரதேச செயலாளர் டி.எம்.அன்சார், உதவி பிரதேச செயலர் வை.ராசிக், சட்டத்தரணி நஹீஜா முஸாபீர், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை வைத்தியர் டி.எஸ்.அர்.தாசிம், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் ஏ.எல்.தவ்பீக், பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் எம்.எஸ். ஜவ்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வின் அக்கரைப்பற்று பிரதேசத்தின் கலை இலக்கியவாதிகளுக்கு கௌரவம் வழங்கப்பட்டது.

# காணிப்பத்திரம் வழங்கலும் அதிபர் அலுவலகம் திறப்பும்





(பாறுக் ஷிஹான்)

மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் காணிப்பத்திரம் கையளிக்கப்பட்டதுடன் அதிபர் அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரியின் நீண்டநாள் தேவையாக இருந்த அதிபருக்கான அலுவலகம் உத்தியோக பூர்வமாக நேற்று முன்தினம் (17) திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலையின் முதல்வர் ஐ. உபைதுல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சகுதுல் நஜீம், விஷேட விருந்தினராக கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ் மற்றும் இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளன செயற்றிட்ட ஆலோசகர் எம்.ஐ.எம்.வலீத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் மாணவர்களின் கலை கலாசாரத்துடன் இடம்பெற்ற இந்நிகழ்வின் பிரதான நிகழ்வாக பாடசாலைக்கான விடுதி வசதியினை அமைப்பதற்குரிய காணிப் பத்திரம் காணி உத்தியோகத்தர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளரினால் பாடசாலை அதிபரிடம் பாடசாலை பிரதி அதிபர்கள் ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திசபை உறுப்பினர்கள் பழைய மாணவர்கள் ஓய்வுபெற்ற அதிபர்கள் ஆகியோரின் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ள காணியில், அம்பாறை மாவட்ட காணி பயன்பாட்டு திட்டமிடல் குழுவின் தீர்மானத்துக்கு அமைவாகவும் கல்லூரிக்கு மாணவர் விடுதி அமைக்கப்படவுள்ளது.

புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட அதிபர் விடுதி புனரமைப்புக்காக அதிபரின் வேண்டுகோளுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.



# இந்தியப் படைகளை வெளியேற கோருகின்றார் மாலைதீவு அதிபர்

**மாலே, நவ.19**

மாலைதீவு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று அதிபரான முகமது முய்சு மாலைதீவில் உள்ள இந்தியப் படைகளை திரும்பப்பெறும்படி இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாலைதீவு நாட்டின் அதிபர் தேர்தல் கடந்த செப்டம்பர் மாதம் நடைபெற்றது. இதில், அதிபராக இருந்த இப்ராகிம் முகமது சோலியும், எதிர்க்கட்சியை சேர்ந்த முகமது முய்சுவும் போட்டியிட்டனர். இதில், முகமது முய்சு வெற்றி பெற்றார்.

இதனையடுத்து மாலத்தீவின் 8 ஆவது அதிபராக முகமது முய்சு நேற்று பதவியேற்றார்.

முன்னதாக அதிபர் தேர்தலில் வெற்றிபெற்றால் மாலைதீவில் இருந்து இந்தியப் படைகளை வெளியேற்றுவேன் என முகமது முய்சு வாக்குறுதி அளித்திருந்தார்.

இந்நிலையில், தேர்தலில் வெற்றி பெற்று அதிபரான முகமது முய்சு மாலைதீவில் உள்ள படைகளை திரும்பப் பெறும்படி இந்தியாவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.


மாலைதீவில் 70 இந்திய வீரர்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். இந்திய விமானப்படையின் ரேடார் மற்றும் உளவு விமானங்களும் மாலைதீவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. இந்தியப் போர்கப்பல்கள் மாலைதீவின் சிறப்பு பொருளாதார மண்டலத்தில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

படைகளை திரும்பப்பெறும்படி இந்தியாவிற்கு மாலைதீவு கோரிக்கை விடுத்துள்ள நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக இருநாடுகளும் பேச்சு நடத்தி வருகின்றன.

## சாலையில் அறுந்து கிடந்த மின்கம்பியால் விபரீதம்

# கணவர் கண் முன்னே மனைவி, குழந்தை உடல் கருகிப் பலியான பரிதாப சம்பவம்





கர்நாடக தலைநகர் பெங்களூருவில் அறுந்து கிடந்த உயர் அழுத்த மின்கம்பியை மிதித்த தாய் மற்றும் 9 மாத குழந்தை தீயில் கருகி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்த பெண், சென்னையைச் சேர்ந்த சவுந்தர்யா (வயது 23) எனத் தெரியவந்துள்ளது. மின்வாரிய அதிகாரிகள் உட்பட 3 பேர் மீது பொலிஸார் வழக்குபதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னையில் இருந்து இன்று அதிகாலை பஸ் மூலம் பெங்களூரு வந்து, சாலையைக் கடக்க முயன்றபோது இந்த துயரச் சம்பவம் நடந்துள்ளது.

கணவர் கண் முன்பே மனைவியும், குழந்தையும் மின்சாரம் தாக்கி பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.






# 41 தொழிலாளர்களையும் மீட்கும் பணி மும்முரம்

**உத்தரகாசி, நவ. 19**

உத்தரகாண்ட் மாநிலம் உத்தரகாசி மாவட்டத்தில் சில்க்யாரா- தண்டல்கான் இடையே சுமார் 4.5 கி.மீ. தூரத்துக்கு அமைக்கப்பட்டு வரும் சுரங்கப்பாதையின் ஒரு பகுதி கடந்த 12 ஆம் திகதி இடிந்து விழுந்தது. இதில் 41 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். அவர்கள் ஆக்சிஜன் குறைந்த சூழ்நிலையில் அதற்குள் தவித்து வருகிறார்கள்.

சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணி தொடர்ந்து ஒரு வாரமாக நடைபெற்று வருகிறது. தொழிலாளர்கள் வெளியே வருவதற்காக இடிந்து விழுந்த பகுதிக்குள் துளையிட்டு குழாய்களை செலுத்தும் பணி நடைபெற்று வருகிறது. இதற்காக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட எந்திரம் பயன்படுத்தப்பட்டது.

நேற்று பிற்பகலில் அந்த எந்திரம் மூலம் துளையிட்டு 5-வது குழாயை செலுத்தும் பணி நடைபெற்றது. அப்போது சுரங்கப்பாதைக்குள் ஒரு பலத்த விரிசல் சத்தம் கேட்டது. இந்த இடையூறு காரணமாக மீட்பு பணி நிறுத்தப்பட்டது.

இதற்கிடையே மத்திய பிரதேச மாநிலம் இந்தூரில் இருந்து மற்றொரு அதிக சக்தி வாய்ந்த துளையிடும் எந்திரம் விமானம் மூலம் சுரங்கப பாதை பகுதிக்கு நேற்று கொண்டு வரப்பட்டது. அதன் மூலம் துளையிடும் பணிக்கு மீட்பு படையினர் தயாராகி வருகிறார்கள். இதற்காக மலை உச்சியில் இருந்து செங்குத்தாக துளைபோட முயற்சி செய்து வருகிறார்கள்.

சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணியில் நிபுணர்கள் குழுவுடன் பிரமதர் அலுவலகத்தின் அதிகாரிகள் குழுவும் இணைந்துள்ளனர். இது தொடர்பாக பிரதமரின் முன்னாள் ஆலோசகர் பாஸ்கர் குல்பே கூறுகையில் -

““தொழிலாளர்களை மீட்க நிபுணர்களுடன் இணைந்து 5 திட்டங்களை வகுத்துள்ளோம். ஒரே வழியில் மட்டும் முயற்சி செய்யாமல் 5 திட்டங்களையும் ஒரே நேரத்தில் செயல்படுத்தி மீட்பு பணிகளில் ஈடுபட வேண்டும் என்பதில் நிபுணர்கள் அனைவரும் ஒருமித்த கருத்துடன் உள்ளனர்.

“மீட்பு படையினரின் ஒருங்கிணைந்த முயற்சியால் தொழிலாளர்கள் இன்னும் 4 அல்லது 5 நாள்களில் மீட்கப்படுவார்கள். ஆனால் கடவுள் போதுமான அளவில் கருணை காட்டினால், அவர்கள் அதற்கு முன்பே மீட்கப்படுவார்கள்” என்றார்.

இதற்கிடையே சுரங்கப்பாதையில் சிக்கியுள்ள தொழிலாளர்களின் உறவினர்கள் மீட்பு பணி நடைபெறும் இடத்தில் சுரங்கப்பாதைக்கு வெளியே தொடர்ந்து வேதனையுடன் காத்திருக்கிறார்கள். அதில் சிலர் சுரங்கப்பாதைக்குள் சிக்கியுள்ள தங்களது உறவினர்களிடம் அவ்வப்போது செல்போனில் பேசி வருகிறார்கள்.

சுரங்கப்பாதைக்குள் சிக்கியுள்ள தொழிலாளர்கள் முன்பு இருந்ததை விட தற்போது மிகவும் சோர்வாக இருப்பதாகவும், அவர்கள் உடல்நிலை மோசமடைந்து வருவதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.





# அமெ. ஜனாதிபதித் தேர்தலில் பழசுகள் மீது மக்கள் சலிப்பு!

## இளசுகளைத் தேடுகின்றனராம்

அமெரிக்காவில் அடுத்த வருடம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ளது.

இரு கட்சி ஜனநாயக முறை கடைப் பிடிக்கப்படும் அமெரிக்காவில், தற்போது ஜனநாயக கட்சி சார்பில் ஜோ பைடன் (வயது 80) அதிபராக பதவி வகிக்கிறார். அவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் அமெரிக்க முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் (வயது 77) தீவிரமாக ஆதரவு சேகரித்து வருகிறார்.

பல வருடங்களாக இரண்டு கட்சி களை சேர்ந்த வேட்பாளர்களுக்கே அமெரிக்க மக்கள் மாறி மாறி வாக்க ளித்து வருகின்றனர்.

இந்நிலையில், இரு முன்னணி வேட்பாளர்களை விட புதிய மற்றும் இளைய வயது வேட்பாளர்களை அமெ ரிக்கர்கள் களத்தில் காண விரும்பு கின்றனர் என ஓர் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

அமெரிக்காவில் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு பொருளாதார சிக்கல்கள் உருவெடுத்துள்ளன. பல துறைகளில் வேலைவாய்ப்புகள் குறைய ஆரம்பித்துள்ளன. விலைவாசி கட்டுக்கு அடங்காமல் உயர்ந்து வரு கிறது. இஸ்ரேல்-ஹமாஸ் போர் மற்றும் ரஷ்ய-உக்ரைன் போர் ஆகியவற் றில் அமெரிக்காவின் நிலைப்பாடு பல விமர்சனங்களை எழுப்பி உள்ளது.

இப்பின்னணியில், 2024 அதிபர் தேர்தல் நடைபெற போகிறது.

இரு கட்சிகளின் செயல்பாடுமே திருப்தி அளிப்பதாக இல்லை என்றும், இரு கட்சி வேட்பாளர்களுக்கே மாறி மாறி வாக்களித்து வந்தமையால் சலிப் படைந்து விட்டனர் என்றும், மூன்றாவ தாக ஒரு கட்சி தேவை எனும் மன நிலைக்கு அமெரிக்க மக்கள் வந் துள்ளனர் எனவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இரு கட்சிகளையும் சாராமல் இது வரை மூன்றாவதாக எந்த வேட்பாளரும் அங்கு வென்றதில்லை.

1992இல் தொழிலதிபர் ராஸ் பெரோ (Ross Perot) இரு கட்சிகளையும் சாராத சுயேச்சை வேட்பாளராக 19 சதவீத வாக்குகள் வாங்கியிருந்தார் என்பதும் 2000 இல் ரால்ஃப் நாடர் (Ralph Nader) 3 சதவீத வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது என்பதும் குறிப் பிடத்தக்கவை.

தற்போது சுயேச்சை வேட்பாளராக றொபர்ட் எவ் கென்னடி ஜூனியர், (Robert F. Kennedy Jr) மூன்றாவது வேட்பாளராக களம் இறங்கினால் உருவாகும் மும்முனை போட்டியில் 20 சதவீத வாக்குகளை அவர் வெல்ல கூடும் என்றும் அந்த ஆய்வு தெரிவிக் கிறது. தேர்தல் நெருங்கும் போது அவருக்கு ஆதரவு கூடலாம் என்றும் மக்கள் நினைக்கின்றனர்.

நீண்ட காலமாக உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல் தலைவர்க ளிடம் பொதுமக்களுக்கு - குறிப்பாக இளம் வயதினருக்கு - ஒரு சலிப்பு ஏற்பட்டு விடுவதாகவும், அதனால் புதிய முகங்களையே வேட்பாளர்களாக தேட தொடங்குகின்றனர் எனவும் அரசியல் நிபுணர்களும், உளவியல் வல்லு நர்களும் கருத்து தெரிவிக்கின்ற னர்.

# ஜெருசலேத்தை நோக்கி 30 ஆயிரம் பேர் பேரணி!

## பணயக் கைதிகள் விடயத்தை ஒட்டி



இஸ்ரேல் - பலஸ்தீன யுத்தத்தை ஒட்டி இஸ்ரேலில் இருந்து காசாவுக்கு 240 பேர் ஹமாஸ் அமைபினரால் பணயக் கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டு உள்ளனர். அவர்களை மீட்கும் தீவிர பணியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை ஈடுபட்டு வருகிறது. இதற்காக, தரை வழி தாக்குதலையும் முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில், டெல் அவிவ் நகரில் இருந்து ஜெருசலேமில் உள்ள பிரத மர் நெதன்யாகு அலுவலகம் நோக்கி இஸ்ரேலிய பணய கைதிகளின் குடும் பத்தினர் பேரணியாக சென்றனர். அவர் களுடன் 30 ஆயிரம் பேர் இணைந்து கொண்டனர்.

இதுபற்றி ஒரே குடும்பத்தில் இருந்து 2 பேர் பணய கைதிகளாக பிடித்து செல லப்பட்டவர்களின் உறவினரான கோபி பென் அமி என்பவர் கூறும்போது -

""மந்திரிகளைச் சந்திக்க வேண்டும் என நாங்கள் கெஞ்சி வருகிறோம். பணய கைதிகளை திருப்பி கொண்டு வர என்னென்ன திட்டங்களை வைத் துள்ளனர்? என எங்களிடம் கூறும்படி கேட்கின்றோம்.

எங்களுக்கு மட்டுமின்றி பலருக்கும் அரசால் கைவிடப்பட்டு விட்டோம் என்ற உணர்வு ஏற்பட்டு உள்ளது" - எனக் கூறியுள்ளார். பேரணிக்கு ஆதரவாக வந்த அனைவருக்கும் பெரிய அளவில் நன்றி என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பேரணியில் எதிர்க்கட்சித் தலைவர் யாயிர் லபிடும் கலந்து கொண்டார். இந்த பேரணி நிறைவ டைந்ததும், பாதுகாப்பு மந்திரி பென்னி கந்திஜ் மற்றும் கண்காணிப்பு மந்திரி கதி ஐசன்கோட் ஆகியோரை சந்திக்க வும் பணய கைதிகளின் குடும் பத்தினர் முடிவு செய்தனர்.

இரவு 8 மணியளவில் டெல் அவிவ் நகரில் கலை அருங்காட்சியகத்திற்கு வெளியே உரையாற்றவும் திட்டமிடப்பட்டு இருந்தது. இதில், எங்களுடன் ஒன்றாக அமராமல் பாதுகாப்பு மந்திரி முடி வொன்றை எடுக்க கூடாது என்றும் அவர்கள் கூறினர்.



# பிரதான டிப்போவாகத் தரம் உயர்ந்தது பொத்துவில்!

(அபு அலா)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரபின் முயற்சியில் பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக இன்று (19) போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவால் தரம் உயர்த்தப்பட்டது.

புதிய பொருளாதார மூலோபாயங்களை வலுப்படுத்துவதற்காக பொத்துவில் மற்றும் அறுகம்பே சுற்றுலா வலயத்தை ஒருங்கிணைத்து போக்குவரத்து சேவையை மேம்படுத்துவதற்காக பொத்துவில் உப பஸ் டிப்போ பிரதான டிப்போவாக இன்று தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்போது பொத்துவில் பஸ் டிப்போவுக்கு போக்குவரத்து அமைச்சரால் நவீன சொகுசு பஸ் வழங்கப்பட்டது.

இதன்போது 60 மில்லியன் ரூபா செலவில் அமையவுள்ள புதிய கட்டடத்துக்கு அடிக்கல்லும் நட்டு வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினரும், அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யு. டி.வீரசிங்க, இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் பொறியியலாளர் லலித் டி அல்விஸ், போக்குவரத்து சபையின் உயர் அதிகாரிகள், அரச அதிகாரிகள், திணைக்களங்களின் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்நிலையில் பஸ்டிப்போவின் துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான முதற்கட்ட நிதியாக சுமார் 60 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். எம். எம். முஷாரப்பின் வேண்டுகோளுக்கமைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கமைய ஒதுக்கீடு செய்யப்பட்டு முதல் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.














# ஆயுள்வேத மத்திய மருந்தகம் மக்கள் பாவனைக்குக் கையளிப்பு!

(அபு அலா )

கிழக்கு மாகாண நிதியின் கீழ் 14.5 மில்லியன் ரூபாவில் சம்மாந்துறை – மல்வத்தையில் நிர்மாணிக்கப்பட்ட ஆயுள்வேத மத்திய மருந்தகம் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் நேற்று (18) திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டது.

ஆயுள்வேத வைத்தியசாலைகளின் கல்முனைப் பிராந்திய இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான வைத்தியர் எம்.ஏ.நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள உத்தியோகத்தர்கள், சம்மாந்துறை பிரதேச செயலக உதவிச் செயலர் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கல்முனை பிராந்திய ஆயுள்வேத வைத்தியசாலைகளின் வைத்திய பொறுப்பதிகாரிகள், வைத்தியர்கள் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பிரதேச மக்கள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



# சாரணர்களுக்கு சின்னம் சூட்டல்!

( வி.ரி.சகாதேவராஜா)

பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட களுமுந்தன்வெளி கஜமுகன் வித்தியாலய சாரணர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.சிறீதரன் வழிப்படுத்தலில் பாடசாலை அதிபர் நா. இராமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி.ஜெயந்திமாலா பிரியதர்சன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட சாரண ஆணையாளர் தேசகீர்த்தி வே.பிரதீபன், போரதீவுப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

வித்தியாலய சாரண ஆசிரியர்களான த.பிறேமகுமார், ம.கோபிநாத் ஆகியோர் சின்னங்களை சூட்டி வைத்தனர்.

சின்னம் சூட்டப்பட்ட சாரணர்கள் தமது பெற்றோர்களிடம் ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.





உதவி மாவட்ட சாரண ஆணையாளர் ஆறுமுகம் புட்கரன் மேற்பார்வையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

# பாராட்டி வாழ்த்துத் தெரிவிப்பு!

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

ஐக்கிய நாடுகள் சமாதான தூதுவர்கள் பேரவையின் உறுப்பினராக அண்மையில் நியமிக்கப்பட்ட இலங்கை தேசிய ஐக்கியத்திற்கான சர்வமத கூட்டமைப்பின் முஸ்லிம் விவகார சம-தலைவர் அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரியை ஸ்ரீ லங்கா ஷரிஆ கவுன்சிலின் ஆயுள்கால தலைவரும், பஹ்ஜதுல் இப்ராஹீமியா அரபுக் கல்லூரியின் பணிப்பாளருமான அஷ்-ஷெய்க் தேசமான்ய ஹஸ்புல்லாஹ் அப்துல் காதிர் பஹ்ஜி பொன்னாடை போர்த்தி, தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.



இந்நிகழ்வில், பஹன மீடியாவின் முகாமைத்துவப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் அப்துல் முஜீப், ஜாமிஉல் கைராத் மஸ்ஜித் பிரதம இமாம் அஷ்-ஷெய்க் ஏ.எச்.எம். மஹ்தி ரவ்லி மற்றும் நிவ்ஸ்நவ் மீடியாவின் பிரதம ஆசிரியர் பியாஸ் முஹம்மத் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கலாநிதி ஹஸன் மௌலானா 20 வருடங்களுக்கும் மேலாக இலங்கையில் மதங்கள் மற்றும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம், சகவாழ்வு மற்றும் சமாதானத்தை மேம்படுத்துவதற்கு சர்வமதத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பில் அவசர முறைப்பாடு செய்யலாம்!

## தொலைபேசி இலக்கங்கள் அறிமுகம்



(நூருல் ஹுதா உமர்)

சிறுவர் மற்றும் பெண்கள் தொடர்பான வன்முறைகள் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் முறையீடு செய்ய 24 மணி நேர அவசர தொலைபேசி இலக்கங்களான 1929 மற்றும் 1938 ஆகிய இலக்கங்கள் ஊடாக அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளை செய்ய முடியும்.

இந்த அவசர தொலைபேசி இலக்கங்களை மக்கள் மயப்படுத்தும் நோக்குடன், அதன் முதற்கட்டமாக பொது மக்கள் அதிகம் சேவை நாடி வரும் பிரதேச செயலகத்தின் உடைய சேவைப் பிரிவுகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு அறிமுகம் செய்து வைத்து அவசர இலக்கமிடப்பட்ட விழிப்புணர்வு விளம்பர சுவரொட்டிகளை காட்சிப்படுத்தும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் தலைமையில் இடம்பெற்றது.

அண்மைக் காலமாக சிறுவர் மற்றும் பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் பாரிய அவதனம் செலுத்தப்பட்டு வருகிறது.

நாட்டில் சிறுவர் மற்றும் பெண் தொடர்பான துஷ்பிரயோகங்கள், வன்முறைகள் மற்றும் பாதுகாப்பற்ற நிலைமைகள் அதிகம் பதிவாகி வருகின்றன.

இந்த நிலையில் அவர்களுடைய பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக நடைபெற்ற இந்நிகழ்வில் நிர்வாக உத்தியோகத்தர் எம்.எம்.எம். தௌபீக், நிர்வாக கிராம உத்தியோகத்தர் எச்.பி. இ. யசரட்ன பண்டார மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள் உட்பட பிரதேச செயலக ஏனைய பிரிவு உத்தியோகத்தர்கள், கிளை தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# ஏறாவூர், ஆறுமுகத்தான் குடியிருப்பில் நிரந்தரமான வீடமைத்து அன்பளிப்பு!





(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் பிரிவில் ஆறுமுகத்தான் குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் வீடின்றி இருந்த குடும்பம் ஒன்றுக்கு நிரந்தர வீடு ஒன்று அமைத்து வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு வீடமைப்பு அதிகார சபை 6 லட்சம் ரூபா நிதி வழங்கியிருந்தது. அது போதுமானதாக இன்மையால், சுவிஸ் நாட்டில் வசிக்கும் சமத்துவ மக்கள் நல ஒன்றியத்தின் பணிப்பாளர் இரா. விஜயகுமார் மீதி நிதியுதவியை வழங்கியிருந்தார்.

விஜயகுமாரது பிள்ளைகளான விதுர்சிகா, தர்சிகா ஆகியோரது பிறந்த நாளை முன்னிட்டு பிரதேச செயலரின் சிபார்சுக்கு அமைவாக அஹிம்சா சமூக நிறுவனத்தின் வழிநடத்தலில் இந்த உதவி வழங்கப்பட்டது.






# இக்கட்டில் இந்தியா!

இன்று நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டத்தில், அவுஸ்திரேலியப் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் இந்திய அணி வெறும் 240 ஓட்டங்களையே சேர்த்தது.

இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெற்று வருகின்றது.

இதில், இந்தியா – அவுஸ்திரலிய அணிகள் மோதிக்கொண்டிருக்கின்றன.

முதலில் இந்திய அணி துடுப்பெடுத்தாடியது. அந்த அணி 30 ஓட்டங்களைச் சேர்த்திருந்த போது முதல் விக்கெட்டைப் பறிகொடுத்து அதிர்ச்சியளித்தது.

நான்கு ஓட்டங்களைச் சேர்த்திருந்தபோது சுப்மன் ஹில் ஆட்டமிழந்து சென்றார்.

அவருக்கு அடுத்ததாக வந்த கோஹ்லி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதற்கிடையில் மறுமுனையில் நின்ற அணித்தலைவர் ரோஹித் சர்மா 47 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அவருக்கு அடுத்து வந்த ஸ்ரேயஸ் ஐயர் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

அப்போது இந்திய அணி 81 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்நிலையில், சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த விராட் கோஹ்லி அரைச்சதம் அடித்த கையோடு, 54 ஓட்டங்கள் சேர்த்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ரவீந்திர ஜடேயா 9 ஓட்டங்களுடன் பெவிலியன் திரும்பினார்.

மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ராகுல் 66 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அவருக்கு அடுத்து மொஹமட் சமி 6 ஓட்டங்களுடன் நடையைக் கட்ட, பும்ரா ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் தாக்குப் பிடித்து ஆடிய சூர்யகுமார் யாதவ் 18 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழக்க, அவரைத் தொடர்ந்து யாதவ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இந்திய அணி 50 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 240 ஓட்டங்களைச் சேர்த்தது.

மொஹமட் சிராஜ் 9 ஓட்டங்களைச் சேர்த்திருந்தார்.

அவுஸ்திரேலியா சார்பாக பந்துவீச்சில், மிச்சல் ஸ்ராக் 3 விக்கெட்டுகளையும், ஜோஸ், கம்மின்ஸ் ஆகியோர் தலா இரு விக்கெட்டுகளையும் சாய்க்க, எஞ்சிய விக்கெட்டுகளை, மக்ஸ்வெல், சம்பா ஆகியோர் தலா ஒன்றுப்படி சாய்த்தனர்.

இந்தச் செய்தி எழுதப்படும் வரை அவுஸ்திரேலிய அணி துடுப்பெடுத்தாடவில்லை.

# கோஹ்லிக்கு சச்சின் கொடுத்த அன்புப் பரிசு





உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டம் இந்தியாவில் இன்று நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், இந்த ஆட்டம் தொடங்குவதற்கு முன்னர் இந்திய வீரர் விராட் கோஹ்லிக்கு கிரிக்கெட்டின் அதிஉச்ச ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், தாம் கடைசியாக விளையாடிய ஒருநாள் போட்டியில் அணிந்திருந்த ‘ஜெர்சி’யில் கையெழுத்திட்டு அன்புப் பரிசாக வழங்கியுள்ளார்.



# கிரிக்கெட் உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் இன்று

















